கலா நிலயம்.

V2 No.41 17 Oct 1929.

DC
[illegible]
M29.2.4.
189076.

KALANILAYAM.

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ஹு அக்டோபர் மீ 17உ [No. 41.

3 - N 19

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 801
2. நம்மாழ்வார் விபவம்
K. இராஜகோபாலாசாரியார் B.A. B.L. 803
3. தமிழ்ப் பாடம் (திருவரங்கத்தந்தாதி) 804
4. அண்ட புராணம் (கலியுகமாந்தர் சிறப்புப்படலம்)
T. S. இராமசந்திர ஐயர் B.A. 806
5. அப்பர். (நாடக வியல்)
E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 807
6. அரசன் அலர்ஹாதன் (Tolstoys Short Story)
V. K. இராமநாத ஐயர் B.A., B.L. 810
7. வில்லிபாரத விளக்கம் (இராசசூயச் சருக்கம்)
T. S. நடராஜபிள்ளை B. A., B. L. 813
8. கம்பராமாயணம் (எதிர்கொள் படலம்)
T. N. சேஷாசலம் B. A, B. L. 815
9. வர்த்தமானம் 819

189676

கலா நிலயம்

சுய கல்சர்.

VI

இதுகாறும் வகுத்துக் காட்டியபடி, மானுடர்க்கு இயற்கையாய் அமைந்துள்ள தருமசிந்தனை தெய்வசிந்தனை பகுத்தறிவு உறவினையுகத்தல் ஆகிய அம்சங்களைப்போன்றே அகழினைமகிழ்வதாம் உணர்வொன்றும் இயற்கையாய்ப் பொருந்தியிருக்கின்றது. இது தன்னிலையில் ஓர் தனித்தன்மையா யிருப்பதுமல்லாமல், மற்ற அம்சங்களுக்கும் ஒவ்வோர்விதத்தில் ஆதாரமா யிருக்கின்றபடியால் இவ்வியற்கையை உணர்ந்து வளர்ப்பதற்குரிய கல்சரில் கருத்துடையரா யிருத்தல் யாவற்றினும் முக்கியமாகும்.

எவ்வயது எந்நிலைமை எத்தொழில் எவ்வறிவு உடையவராயினும், மனிதஇனத்தைச் சேர்ந்த ஒவ்வொருவ ரியற்கையிலும் அழகினைக் கண்டக்கால் 'இது அழகுடையது' என்று உணர்ந்துகொள்ளும் சக்தி யிருக்கின்றது. இச்சக்தி சிறிதளவேனும் இல்லாதார் எங்குமிலர். சிலர் கலையினது நுட்பத்தில் அழகு காண்பர்; சிலர் ஆடைநிறத்திலும் அரிவையர் முகத்திலுமே காணும் அழகைக் கிரகிக்கக்கூடியவரா யிருப்பர். கருத்தளவே சிலர் அழகினை ஓர்ந்துகொள்ளப் பழகினவர்களா யிருக்கலாம். வேறுசிலர், பொருளொடு சார்த்தியே எழிலினை அறியக்கூடியவரா யிருக்கலாம். அழகினால் தூண்டப்பெற்ற உணர்ச்சி மனத்தின்கண் நின்றுபயில்கின்ற காலவளவிலும் ஒருவருக்கொருவர் வேறுபாடு இருக்கலாம். எனினும் நுண்ணிதோ அன்றோ, பெரிதோ சிறிதோ, கருத்தோ பொருளோ, நிற்குமோ அகலுமோ, அழகினை விழையாத மாந்தர் இவ்வுலகில் மருந்திற்கும் காணமாட்டார். தாலாட்டக் கேட்டமரும் பாலகர், இவ்வியற்கை தூண்டுதலாற்றான் இசையினை தழகிற்கு ஈடுபடுகின்றனர். அம்புலியம்மானை அவர் தம் செஞ்சிறு கரங்களால் வரவழைப்பதும் அழகினது இயற்கை உணர்ச்சியே யன்றி வேறன்று. ஒன்றுமறியாப் பாமரனு யிருப்பவனுடைய புலன்களுக்கும் அழகென்று தோன்றுகின்ற பொருள்கள் சில இருக்கும். இன்னபடி எவ்வெவர் மனத்திலும் அழகின் விதை அமைந்துளது. இவ்விதை வளருமாயின் அது உலகனைத்தும் தன் நிழலில் அடக்கிக்கொள்ளவல்ல அளவினதாய் வியாபிக்கும். எல்லோருமிதனை இதமுறப்போற்றி வேளாண்மை புரியாத தேனோ! இந்தச் சக்தியின் வளர்ச்சிக்கு ஏற்றபடி இப்பிரபஞ்சம் நல்குதற்குள உதவிக்கோ அலகில்லை என்னு மவ்வுண்மையை மறத்தலாகாது. நிகிலப் பொருள்கள்யாவும் அழகிற்கென்று அமைந்திருக்கின்றனவே யன்றி உபயோகத்திற்காக இருப்பன வாகா. உலகப்பொருள்கள் எண்ணில்பல்கோடி வகைளில் உணவிற்கும் உடுப்பதற்கும், மற்ற உடல்வரு வேட்கைகளுக்கும், உதவவல்லன சிற்சிலவே. எஞ்சியவெலாம் எழிலிற் கிருப்பிடமாதலன்றி வேறோர் உபயோகமும் வாய்த்தில. ஆதலின், நமது அழகினுணர்ச்சிக்கு ஊக்கம் உறுத்துதற்கே இப்பிரபஞ்சம் படைக்கப்பெற்றுளதெனக் கூறலாம். எங்குமயமான தத்துவம் இவ்வெழில். தேமாந் தனிரில் தவழ்கின்றது. அலர்கின்ற மலரின் இதழ்தோறும் அலர்கின்ற தழகு. படரும் பூங்கொடிகளோடழகும் படர்கின்றது; நிற்கின்ற மரமெலாம் அழகின் உரு

வமே. புல்லிலைப் பைந்நுனி குழவித்தென்றலால் அலையென அசையும்போதும், திண்மரப் பணைக்கிளை காற்றிற்கு ஆடும்போதும் அழகும் அவைகளோடு அசைந்தும் ஆடியும் எதிர்நிருத்தனம் புரியவில்லையா. அழகலால் கடல்களுள் கொந்தளித் தெழுவது வேறு தானுண்டோ! மதியமும் இரவியும் சிவந் துதிப்பது மழகு, செம்மாந்து திரிவதுமழகு, இளைத்துத்தா மிறங்குவது மழகு. வெண்முத்தின் தண்மையுள் அழகு தயங்குகின்றது. மணிநின்று ஒளியாய்ப் பீறுவது மழகே. மலையாக ஒருசார் குவிந்திருக்கும், மணலாக மறுசார் பரந்திருக்கும், அருவியெனப் பாயும், ஆறெனவோடும், கடலெனக்கிடக்கும், முகிலெனமேயும், மின்னெனமிளிரும், மழையெனப்பொழியுமவ்வழகு. பலபடப்புகலவதென்! குவலய முழுவது மழகின் கோயில். கண்ணைத்திறந்துமிவ் வழகின்பிழம்பு தம்மை எம்மருங்குஞ் சூழ்ந்திருக்கக் காணாதார் காணாதாரே. இவ்வழகினது அருமை யாதென மதித்துச் சொல்லுந் தரமன்று. அதனுள்வரும் அகமகிழ்வின் நுண்மையுந் தூய்மையும் தெய்வத்தன்மை வாய்ந்தன. நம்முடைய மென்மைத்தன்மைக்கும் உத்தம உணர்விற்கும் தோன்றாத்துணையாய் நின்றுதவும் பெருந்தகையாய இவ்வழகை எங்கெங்குங் கண்டு ஆதரத்தினொடு அஞ்சலிசெய்ய நினையாதார் புவியிற் பிறந்தென்செய்தார்! இத்துணை யழகிற்கிடையில் இருந்தும், நிலத்தின்மேல் நில்லாது விசும்பின்கீழ் வாழாது, அவ்வழகிற் கந்தகாரப் பொதியறைபுக் குழல்வார்போல் தடுமாறும் மன்பதைத்தொகுதியின் புன்மதியை நினைக்குங்கால் மேலோர்மனம் உளைந்துருகும். இயற்கையா யமைந்திருந்த அழகினை துணர்ச்சியை வளர்க்காது வறிதே சிதைவுற விட்டுவிட்டதால் இவ்வுலகத்தினருள் கணக்கில் பலர் தமக்குரியவோர் கரைசெயற்கரிய இன்பத்தையும் உவகையையும் இழந்தவராய்க் கழிகின்றனர். இவ்வாறு கழிவதற்குக் காரணம் அவர், தம் சுயஆராய்ச்சிச் சக்தியைச் செலுத்தித் தம்மைத்தாம் பன்முறை சோதித்துக் கொள்ளாமையே ஆகும். அழகுடைய பொருளொன்றைக் கண்டக்கால் இயற்கையாயவோர் இன்பவுணர்வு முதலில் தோன்றுகின்றது. இந்த உணர்வை உறுவிப்பது, பொருளன்று—அதன்பா லுள்ள அழகே யாகும். அழகியபொருள்களைக் காண்பதால் நம் மனதில் உண்டாகும் இன்பவுணர்வையும், அதன் தன்மை அளவு முதலியவற்றையும், அவ்வுணர்வுபற்றி நிகழ்கின்ற வேட்கையையும், அவ்வேட்கைக்கிணங்க நம்மால் நிகழ்த்தப்பெறும் தொழில்களையும், இவைகளோடு தொடர்புடைய யாவற்றையும், பற்பல விதங்களில் வகுத்தும் தொகுத்தும் பற்பல செவ்வியில் செவ்விதின் றனித்து ஆராய்வோமாயின், நம்வயின் எழுகின்ற இன்பத்திற்கு ஆதாரமாயிருப்பது பொருளன்றி அதன் கண்ணுள்ள தத்துவமாம் அழகே என்னும் உண்மை புலப்படும். ஆராய்ச்சி யிலாதா ரிதனை யறித லருமை. அறியாதவரையில் அப்பொருள்கள் தாம் தம்மை வயப்படுத்துகின்றன என்று மயங்கியிருப்பவ ராவர். ஆயின், சிந்தனையெல்லாம் அப்பொருளூடு பாய, அப்பொருள் மீண்டுவந்து இவர் சிந்தனையைக் கவ்விக் கொள்கின்றது. இதனிடையில், பொருளே தலையிடம்பெற்றுவிட்டதால், அதன்பால் இருந்த அழகினது காட்சியை இனி இவர் காணாதவராகி, அப்பொருள்களைத் தம்முடைமையாக்கிக் காக்க முயல்வதும், அம்முயற்சியில் ஒருவரோடொருவர் இகல்வதுமாய் முடிகின்றனர். அழகினது மாட்சியைக் காட்சிகொள்ளும் இயற்கை உரிமையினை விற்றுப் பொருளின் உடைமைக்குத் தம்மை அடிமைசெய்துகொள்வதே ஆராய்ச்சியில்லாத மாந்தர் தொழிலாகின்றது.

இப்படிப் புகழ்ந்துகூறும் அழகென்னும் அது யாது, என்று கேட்பீராயின், அதற்குத் தக்க விடை அறிவின்மிக்க சான்றவர்களிற் சான்றோரு மிதுகாறும் பகர்ந்திலர். அழகெனும் அத் தத்துவம் ஒன்று உளதென்னு முண்மைக்கு ஐயமில்லையாதலால், அது இன்னதென்று அறுதியிட்டுக் காட்டவேண்டிய அவசியமுமில்லை. ஆதலின் ஒன்றிங்குக் கூறுமிது போதும். நமக்குப் புறத்ததாய சிருஷ்டியினழகு, நம் அகத்திலுள்ள ஆன்மாவின் மாண்பினோடுநெருங்கிப் பிணைந்ததோர் உறவினை யுடையதாகும். சிருஷ்டியழகின் ஓர் சின்னமே நமது ஆன்மா என்னலாம். பொருள்களது ஜடத்வமும், தமோகுணமும், அழிவின் நிச்சயமும், கழுவாத் தன்மையும் நம் கண்களிலிருந்து மறைய மறைய, அதன்பா லுள்ள அழகினது மகிமை தெளியலாகின்றது. அவ்வாறு தெளியும்போது அப்பொருள்கள் நம்மைத்தொடர்ந்து பற்றுமல், ஆதியந்தமில்லாத ஆகாயப்பெருவெளியில் சாச்வதரூபத்தோடு பாய்ந்து பரவிவிடவே, நமது ஆன்மாவிற்கு முத்திநிலை பயக்கக் காண்போம். பொருள்களது பற்றை விட்டுவிடுவது என்னும் சொல்லின் உண்மை யாதென ஆயுங்கால் அந்தத்தில் அது, பொருள்களே நம்மைப் பற்றாது அகல்வது என்னும் அர்த்தத்தையே இதனால் தருவது மாகும். அழகின் தத்துவத்தை உள்ளபடி அநுபவிக்கும் பயிற்சியால் பொருள்களின் ஜடத்வம் நம் கண்முன் பிதிர்ந்துபோக, அவைகளையியக்கிய அழகு அகண்டாகாசத்தில் வியாபிக்கவே, அவ்வழகைத் தொடர்ந்துசெல்லும் நமது ஆன்மாவும் அவ்வாகாசத்தில் பரவி அதனுடன் இரண்டறக்கலந்துவிடுகின்றது. எனின், பற்றுபவனும் பற்றப்படும் பொருளும் இனி வேறுவேறு யில்லை. இயற்கைப் பொருள்களில் வைகிய அழகையே நாம் இதுகாறும் உதாரணங்களுக்கு உரைத்து வந்தோமெனினும், முன்கூறியவை அத்தனையும் மனிதனது செய்கையாகத் தோன்றும் கலைகளின் அழகிற்கும் ஒக்கும். எல்லாக்கலைகளும் அழகின் தோற்றங்களே யாயினும், இலக்கியக்கலையில் அவ்வழகு தன் முழுச்சிறப்போடும் விளங்குகின்றது. காவியங்களின் கதைகள் அழகிற்குக் களமாக அமையும். ஒருபொருளி லழகு இருக்கின்றது என்று உரைப்பதும், ஒரு கதையில் அழகு இருக்கின்றது என்பதும் ஒரே கருத்துடையன. ஒருவிதத்தில் நோக்குங்கால், பொருள்களின் ஜடத்வம் நம் நினைவிலிருந்து அகல, அதன்சாரமாகிய அழகே நிகழும்படி பயில்தல்வேண்டும் என்று முன் உரைத்ததற் கிணங்க, சிறந்த காவியங்களின் கதைகளுக்குரிய ஜடத்வம், தெருண்ட மேலவர் கருத்தில் தங்காது அகன்று அதன் சாரம்சமாகிய அழகே நிலைநிற்கும் என்று கூறலாம். அழகெனும் இயற்கை உணர்ச்சியைக் கல்சர் செய்துள்ளவருக்கே இத்தனிய நன்மை வாய்க்கும். அல்லாதார், எத்துணைக் கற்றிருந்தும் கதையைக்கடந்து அழகை அநுபவிக்கும் ஆற்றலுடையவ ராகார். இஃதுணர்ந்தால், “இராமனும் கிருஷ்ணனும் சிவனும் இது இது செய்த

னரே, இவர்களேயோ தெய்வமென்னல்? பிள்ளைக்கறியும் பிறன்மனையும் விழைந்த சிவனும், அவனைப் புகழும் புராணங்களும் எங்களுக்குவேண்டா” என்பன போன்ற படிற்றுரைகளின் சிறப்பின்மையைக் கண்டுகொளல் அருமையாகாது. கலைமகள் அருளுண்டேல் கல்லும் கவிசொல்லும்; இல்லையேல் கவியுமே கல்லென உறைதல் முறையாயிற்று.

ஆதலின், பொருள்களின் புறத்துள அழகும், கலைகளின் அகத்துள அழகும், இரண்டும் தத்தம் உண்மைத் தோற்றத்தின் தரிசனத்தைக் கல்சர் செய்துள மாந்தருக்கே அளிக்கும் தன்மையன. ஆராதனைகள் செய்வதால் கடவுளை எய்தலாமென்பர்; அழகினை எய்துதற்கும் அவ்வகை ஆராதனைவேண்டும். கடவுள் எங்குமுள பொருளெனினும் ஆராதனைக் குரியனவாய் விக்ரகங்களை அமைத்துக் கொள்வதேபோல், அழகினது ஆராதனை கைவரும்படி மாபெரும் புலமையோர் நூல்கள் அமைந்திருக்கின்றன! அழகிற்கு அஞ்சலி செய்யும்வண்ணம் தூண்டுகின்ற இயற்கை நம்மோடு பிறந்திருக்கின்றது. அது நமக்கு இணையாய் வளர்ந்தும் வருவதற்கேற்ற பயிற்சிகள் செய்ய வேண்டுமென்பது நம்முடைய கல்சரின் ஒரு பாகமாதல் வேண்டும். தருமசிந்தனையும் தெய்வசிந்தனையும், இவ்வழகெனும் உணர்ச்சியின் உருவங்களே என்னும் வாய்மை சுயஆராய்ச்சி செய்யுங்கால் எளிதில் புலப்படும். மற்று, வடிவமும் நிறமும் ஒலியும்அமைப்பும் ஆதாரமாகப் பெற்றுத் தம் அழகினைப் பொருள்கள் மிழற்றுவதெல்லாம் தருமமும் தெய்வமும் குடிகொண்ட மனச்செவிக்கே இசைந்து கேட்கின்றது. இனி, அழகு வதிந்த மனத்தின் கண்களுக்கே, கண்டனவெலாம் கடவுளின் மோன உருவெளியாகவும், நிகழ்வதெல்லாம் ஈறிலாப் பேரறத்தின் திருநடமாகவும் தோன்றுகின்றன. இதனால், அழகும் தெய்வமும் தருமமும் ஓரினத்தன வென்னும் மெய்ம்மையைச் செவ்விதின் தேர்ந்துகொள்ளலாம்.

OFFICE OF THE REGISTRAR ... 1929 MADRAS

நம்மாழ்வார் விபவம்.

[796வது பக்கத் தொடர்ச்சி]

அதுவும்ஆதாரமாகாது. ஏனென்றால் அத்திருவாய்மொழியில் 10 வது பாசுரத்தில் “தேறேல் என்னை உன் பொன்னடிச்சேர்த்து ஒல்லை, வேறேபோக எஞ்ஞான்றும் விடலே” என்று, உன்திருவடிகளில் திவ்யரேகையைப்போலே பின்னை ஒருகாலமும் உன்னைப் பிரியாது ஒருபடி பண்ணி அருள்வேணும் என்ற கருத்து வைகுண்டத்தில் சாதிக்குமேயல்லது வேறாகாது என்று அர்த்தமாகவில்லையா. இதுபோல இன்னும் சிற்சில இடங்களிலும் அவர் கூறியிருக்கும் அபிப்ராயம் இவ்வுலகத்தில் திவ்யதேசங்களில் கோவில் கொண்டிருக்கும் எம்பெருமானை அநுபவித்துப் புகழ்ந்துபாட ஆசைப்பட்டதினாலும், தனக்குக் கடுக மோக்ஷம்அடைந்து ஆநந்தப் பேரின்ப வெள்ளத்தில் மூழ்க நேரிடாத துக்கத்தினாலும் தூண்டப்பட்டு எழுதியவாறும். மற்று அது தத்வமன்று. முதலில்இவர் இயற்றிய திருவிருத்தத்தில் முதல்பாசுரத்திலேயே

“பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கும் அழுக்குடம்பும்
இந்நின்றநீர்மை இனியாமுறாமை உயிரளிப்பான்”

அடியேன் செய்யும் விண்ணப்பமே, என்றாரம்பித்து இறுதியில் “மாறன் விண்ணப்பம் செய்த சொல்லார் தொடையல் இந்நூறும் வல்லார் அழுந்தார் பிறப்பாம் பொல்லா வருவினை” என்று முடித்திருக்கிறவர் பொய்ந்நின்ற ஞானமும் அழுக்குடம்புங் கூடிய இவ்வுலக வாழ்க்கையை விரும்புவாரா? மேலும், நாலாம் பத்து ஒன்பதாம் திருவாய்மொழியில்,

எண்ணாத் துயர்விளைக்கும்
இவை என்ன உலகியற்கை
கண்ணா வடியேனைப் பணிகண்டாய்
சாமாறே” என்றும்

“அடியேனைப் பண்டேபோல் கருதாது உன்னடிக்கே கூய்ப் பணிகொள்ளே” என்றும் ஓலமிட்டுப் பகவானை பிரார்த்தித்து, அதே திருவாய்மொழியின் பலச்ருதியில் “திருவடி சேர்வது கருதிச் செழுங்குருகூர்ச் சடகோபன் திருவடி மேலுரைத்த தமிழ் திருவடியே அடைவிக்கும்” என்ற மஹானா இவ்வுலக வாழ்க்கைக்கு இசைவார்? மேலும் காண்டவவனதகனத்தில் அக்னிபகவான் வேண்டுகோளுக்கு இணங்கி அக்காட்டிலுள்ள சராசரங்கள் எல்லாவற்றையும் அவருடைய அஜீர்ணவியாதிக்கு மருந்தாய் உணவாகக் கொடுக்க வாக்களித்து ஏற்றுக்கொண்ட கிருஷ்ண பகவான் அர்ச்சுனனோடு உள்ளூறவிலங்கும் பக்ஷியும் ஸர்ப்பமும் தவறாமல் ஓடுவதை மடக்க விதமாக இருக்கையில் ஒரு ஸுமுகன் என்ற ஸர்ப்பம் ஆகாய மார்க்கமாகப் பறந்துபோகையில் “க்ருஷ்ணத்ராஹி”! என்று கூப்பிட்டது. அதற்குப் பகவான் அர்ஜுனனைக்கொண்டு அபயவாக்கு அளித்திருந்தும் மேலே பார்த்திருந்த கருடன் தனக்காகாரமாக ஸுமுகனைத் துரத்திப் பிடிக்கப்போயிற்று. ஐம்புலன்களுடைய கொடுமை, கருடனையே இவ்வாறு ஸுமுகனைப் பிடிக்கத் தூண்டுமானால் மண்ணிலுள்ள என்னை எப்படி நலியாதுவிடும் என்று 7ம் பத்து 6-வது பாசுரத்தில் “விண்ணுளார் பெருமாற் கடிமைசெய்வாரையும் செறும் ஐம்புலனிவை மண்ணுளென்னைப் பெற்றால் என் செய்யா” என்று நொந்து வருந்துகிற இவ்வாழ்வார் இவ்வுலக வாழ்க்கைக்கு எங்ஙனே இசைவார். மேலும் திருவாய்மொழியின் இறுதியில் தம் முத்திரையில் “அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன்” என்று சொல்லியிருப்பதால் அவர் வீடுபெற்றதாகவே கொள்ளல்வேண்டும். இவ்வாக்யம் அவர் நித்ய ஸம்ஸாரி என்ற ஸித்தாந்தத்தோடு எவ்விதம் பொருந்தும்?

இதுவரையில் ஆழ்வார் தாமே ஜன்மங்கள் எடுக்க ஸம்மதித்ததாகப் பாவித்து விமர்சித்தோம். இனி, பகவானே இவரை ஜன்மிக்க ஆஞ்ஞாபித்தார் என்று இவர் ஒக்கலையிலும், கழுத்திலும், [illegible] சிசுவாக விளையாடிக் களித்தவனும் பிறகு முடிவில் எல்லா ஜீவாத்

மாக்களுள்ளும் அகத்திருந்து நடத்துமவனைப் அல்லாமல் இவர் ப்ரக்ருதி தேஹத்தில் புகுந்து அதை விசேஷ ஆதரம்பற்றி ரமித்தவனை ஆழ்வாரே "நீ என் ஹேயப்ரக்ருதியில் உள்ள ஆசையை மங்க வொட்டு" என்று ப்ரார்த்தித்திருக்கிறார். மேலும் ஆழ்வாருக்கு மதியும், அதாவது ஞானமும், நலமும் அதாவது பக்தியும், கொடுத்ததாக அவருடைய முதல் பாசுரத்திலேயே ஆழ்வார் "மதிநலம் அருளினன்" என்று கூறி இருக்கிறார். முழுமுதற் கடவுளான கிருஷ்ணன் கீதையில் அவன் திறத்தில் ஞானசூன்யரையும், அஸூயா பரரையும், பாஹிம்ஸையில் ஸந்தோஷமும்உள்ள தாமஸப்பிரக்ருதிகளையும்அல்லவோ மீட்சிஇல்லாத நித்யஸம்ஸாரி ஆக்கும் பொருட்டு "க்ஷிபாம்ப ஜஸ்ரம் அசுபம் ஆஸுரேஷ்வேவ யோனிஷு" என்று பணித்திருக்கிறார்.

ஆகையால் எவ்விதம் நோக்கினும் ஆழ்வாருக்கு நித்யஸம்ஸாரித்வம் கற்பிக்கிற ஈடு ஒருவகையாலும் ஸமர்த்திக்கத்தக்கதல்ல. பகவானை ஆர்வத்தால் பக்தர்கள் ஏதேனும் குற்றம் கூறினால், அதை க்ஷமித்தருளு. ராவணன் உன்னிடத்தில் அபசாரப்பட்டது உன்னிடம் சீக்கிரம் சேர்வதின் நிமித்தத்தால் என்றன்றோ நீ க்ஷமித்தருளினாய் என்ற அர்த்தமுள்ள,

"ஆறிய வன்பில் அடியார்த மார்வத்தால்
கூறிய குற்றமாக் கொள்ளல் நீ-தேறி
நெடியோய்! அடியடைதற் கன்றே ஈரைந்து
முடியான் படைத்த முரண்."

என்ற பாசுரத்தைப் பொய்கைஆழ்வார் பாடி இருக்கிறார். இது போலவே ஞானமில்லாமல் இவ்வாறுரைத்த ஈட்டுரைகாரரையும் அவரை அனுஸரித்தவரையும் க்ஷமித்தருள வேணுமென்று நாமும் ஆழ்வாரை அளவிலா அன்போடு ப்ரார்த்திப்போம்.

வைணவர் சாற்றுமுறையிலும் "சடகோபன் தண் தமிழ் நூல் வாழ" என்று மாத்திரம் காண்கிறோமே யன்றிச் "சடகோபன் வாழ" என்று பகரக்காணோம்.

தமிழ்ப் பாடம் 93.

[அஷ்ட பிரபந்தம்.]

[788வது -பக்கத் தொடர்ச்சி]

திருவரங்கத்தந்தாதி.

தனமாத ரஞ்சொற் குதலைப் புதல்வர்
தாரணியில்லந்
தனமா தரஞ்செயும் வாழ்வஞ் சியேதஞ்ச
நீயெனப்போந்
தனமா தரங்கிக்க வெற்பெடுத் தாய்தண்
ணனந்தசிங்கா
தனமா தரங்கமுள் ளாயரங் காமுத்தி
தந்தருளே 3.

பதப்பிரிவு:—தனம் மாதர் அம் சொல் குதலை புதல்வர் தரணி இல்லம் தனம் ஆதரம் செய்யும் வாழ்வு அஞ்சிஏ தஞ்சம் நீ என போந்தனம் ஆ தரங்கிக்க வெற்பு எடுத்தாய் தண் அனந்த சிங்காதன மா தரங்கம் உள்ளாய் அரங்கா முத்தி தந்து அருளே.

பதவுரை.

தனம் - முலைகளையுடைய, மாதர் - மாதர்களையும்; அம் - அழகிய, குதலைச்சொல் - குதலைச்சொற்களால் பேசும், புதல்வர் - பிள்ளைகளையும்; தரணி - விளைநிலத்தையும்; இல்லம் - வீட்டையும்; தனம் - செல்வத்தையும்; ஆதரம்செய்யும் - அடையவேண்டுமென்று ஆசைப்படும், வாழ்வு- இவ்வுலக வாழ்க்கைக்கு, அஞ்சி - பயந்து, நீயே - நீயே, தஞ்சம் என -அடைக்கலம் என்று, போந்தனம் - உன்னை அடைந்திருக்கின்றோம்,

ஆ - பசுக்கள், தரங்கிக்க (இந்திரன் பெய்வித்த கன்மழையினால்) கலங்கியபோது, (அவைகளைக் காக்கும் பொருட்டு) வெற்பு - கோவர்த்தனம் என்னும் மலையை, எடுத்தாய் - குடையாகத் தூக்கினவனே! தண் - குளிர்ச்சிபொருந்திய, அனந்த- ஆதிசேஷனை, சிங்காதன-சிம்மாஸனமாக உடையவனே! மா-பெரிய, தரங்கம்—(பாற்கடல், அல்லது காவேரியின்) அலைகளுக்கு நடுவே, உள்ளாய் - இருப்பவனே! அரங்கா - ஸ்ரீரங்க நாதனே! (எங்களுக்கு) முத்தி-மோக்ஷத்தை, தந்து அருள்வாய் - கொடுத்து அருள்வாயாக

கருத்து :—"பெண் பொன் மண் ணாசைகளி லகப்பட்டு, அவ்வாசைகளால் வரும் துன்பத்திற்கே எங்களை ஆளாக்கும் இப்பிறவிக்கு நாங்கள் பெரிதும் பயந்து, நீயேயல்லால் வேறு கதியில்லையென்று உன்னைச் சரணமடைந்தோம். திருவரங்கா, எங்களுடைய பிறப்பை அறுத்து முத்தி தருவாய்" என்று கவி கடவுளை மானுட இனத்தின்பொருட்டு வேண்டிக் கொள்கின்றார்.

விளக்கம் .—இச்செய்யுளின் நான்கு அடியிலும் யமகமாக வந்துள்ள எழுத்துக்கள், 'தனமாதர' என்பனவாகும். அவை,

முதலடியில்—தனம் மாதர் அ(ம்)......எனப் பிரியும். ஸ்தநம் என்ற வடமொழி தனம் என முதற் சொல்லாக வந்தது. இரண்டாவது சொல், மாதர். இந்தச் சொல்லின் ஈற்று மெய்யின்மேல் ஏறுகின்ற அ, என்னும் எழுத்து, பின்வரும் 'அம்' என்னும் சொல்லுக்கு முதலாகும்.

இரண்டாவது அடியில்—தனம் ஆ தர(ம்)..........எனப் பிரியும்—இந்த அடியில் "அஞ்சியே தஞ்சம் நீ" என்று வருமிடத்தில் 'அஞ்சி' என்னும் சொல்லோடு சேர்ந்திருந்த ஏகார இடைச்சொல்லை அதை விட்டுப் பிரித்து, 'நீ' என்பதோடு சேர்த்துப் பிரிநிலையாக 'நீயே' எனப் பொருள் கொண்டோம். (நீ + ஏ, என்பது ய் என்னும் எழுத்து இடையில் வர நீயே என ஆகும்.)

மூன்றாமடியில்—தனம் ஆ தர...ங்கிக்க, எனப் பிரிந்து, முதலிலிருக்கும் 'தனம்' என்னும் மூன்றெழுத்துக்களும், இரண்டாவது அடிக் கடைசியிலுள்ள

'போங்' என்பதோடு சேர்ந்து, 'போந்தனம்' எனும் தன்மைப்பன்மை வினைமுற்றாயிற்று. அதற்கு அடுத்தது, பசு என்னும் பொருளுடைய ஆ என்னும் ஓரெழுத்தொருமொழி. அப்புறமுள்ள தர என்பன, பின்வரும் ங்கிக்க என்பவைகளோடு சேர்ந்து தரங்கிக்க என்னும் சொல் ஆகும்.

நான்காமடியில்—தன, என்ற முதலிரண்டு எழுத்துக்கள் மூன்றாவது அடியின் கடைசியிலுள்ள 'சிங்கா' என்பதோடு சேர்ந்து, 'சிங்காதன' என்றாகின்றது. இதற்குச், 'சிம்மாசனமாக உடையவனே' என்பது பொருள். பின்வரும், மா என்பது பெரிய என்னும் பொருளுடைய உரிச்சொல். அதற்கப்புறம் இருக்கின்ற 'தர' என்னும் எழுத்துக்கள் 'தரங்கம்' என்னும் சொல்லைச் சேர்ந்தன.

தருக்கா வலாவென்று புல்லரைப் பாடித்
தனவிலைமா
தருக்கா வலாய்மயி லேகுயி லேயென்று
தாமதராய்த்
தருக்கா வலாநெறிக் கேதிரி வீர்கவி
சாற்றுமின்பத்
தருக்கா வலாயுதன் பின்றோன் றரங்கர்பொற்
றாளிணைக்கே. 4.

பதப்பிரிவு:—தரு காவலா என்று புல்லரை பாடி தன விலை மாதருக்கு ஆவல் ஆய் மயிலே குயிலே என்று தாமதர் ஆய் தருக்கா அலா நெறிக்கு ஏ திரிவீர் கவி சாற்றுமின் பத்தருக்கு ஆ(க) அலம்ஆயுதன் பின் தோன்று அரங்கர் பொன் தாள் இணைக்கு ஏ.

பதவுரை.

தரு - கற்பகத்தருவிற்கு, காவலா - தலைவனான இந்திரனே, என்று - என்று, புல்லரை - அற்பர்களை, பாடி-இச்சகம்பாடி, (அவர்களிடம்பெற்ற பொருளைக் கொண்டுபோய்) தனம் - முலைகளை, விலை - விலைக்கு விற்கும், மாதருக்கு - வேசியருக்கு, ஆவல் ஆய் - ஆவலை உடையவர்களாகி, மயிலே குயிலே என்று - மயிலே என்றும் குயிலே என்றும் (அவர்களை நயந்து கொடுத்துவிடும்), தாமதர் ஆய் - தாமதகுணம் உடையவராய், தருக்கா - களிப்புற்று, அலா - நல்லது அல்லாத, நெறிக்கே - வழியிலேயே, திரிவீர்- திரிகின்றவர்களே! பத்தருக்கு ஆ - பக்தர்களைக் காக்கும் பொருட்டு, அலம் ஆயுதன் - கலப்பையை ஆயுதமாக உடைய பலராமனுக்கு, பின் - தம்பியாக, தோன்று - பிறந்த, அரங்கர் - திருவரங்கருடைய, பொன் - அழகிய, தாள் இணைக்கே - இரண்டு பாதங்களைப்புகழ்ந்தே, கவி சாற்றுமின் - கவி பாடுங்கள்.

கருத்து:—கற்றகல்வியை நரஸ்துதி செய்வதற்கும், அப்படி இச்சகம்பாடிப் பெற்ற பொருளைக்கொண்டு சிற்றின்பங்களைத் தேடிப் பாராட்டுவதற்கும் பயன் படுத்துகின்றவர்களை நோக்கி, "இதற்குப் பதிலாய், நீங்கள் எம்பெருமானது திருவடிகளைப் புகழ்ந்துபாடி உய்ந்தாலாகாதோ" என்று கவிஇரங்கிக் கூறுகின்றார்.

விளக்கம்:—தருக்காவலா, என்ற யமகவெழுத்துக்கள் முதலடியில், தரு காவலா என்ற இரண்டு சொற்களாகப் பிரியும். தரு, விருக்ஷம் என்ற பொருளுடைய பெயர்ச்சொல்; காவலா, எட்டாம் வேற்றுமை, காவலனாகிய இந்திரனே, என்பது பொருள்.

இரண்டாமடியில்—தருக்கு ஆவல் ஆ......எனப் பிரியும். தருக்கு என்னும் எழுத்துக்குள், முதலடியின் கடைசியிலுள்ள 'மா' என்னும் எழுத்தோடு சேர்ந்து மாதருக்கு, என்ற நான்காம் வேற்றுமைப் பெயர்ச்சொல்லாகும். அடுத்தசொல், ஆவல், (மாதருக்கு + ஆவல் = மாதருக் காவல், என்று ஆவதற்கு விதி இனிவரும் இலக்கணப் பாடங்களில் கூறுவோம்.) அதற்கு அடுத்தசொல்லாகும் ஆய், என்பதன் முதலெழுத்து ஆ, முன்மொழி யிறுதியிலுள்ளல் என்னும் மெய்யின்மேலேறி அதனை லாஎன ஆக்கியது.

மூன்றாமடியில்—தருக்கா அலா, எனப் பிரியும். தருக்கா என்பது தருக்கி என்னும் உடன்பாட்டுப் பொருளுடைய வினையெச்சம். சாதாரணமாய் எதிர்மறை உருவத்தில் உள்ள தருக்கா, செய்யா, உண்ணா என்பனபோன்ற வினையெச்சங்கள் உடன்பாட்டுப் பொருளையுந் தரக்கூடும் என்பதை முன் (வால்யூம் 1. பக்கம் 51. 1015) விளக்கியிருக்கின்றோம். அடுத்த பதம், அலா, என்பது. இது 'அல்லாத' என்று பொருள்படும் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் (வால்யூம் 1. பக்கம் 51). தருக்கா + அலா, என்பன தருக்காவலா, எனப் புணர்ந்தன. ஏனெனில் நிலைமொழி யிறுதியில் ஆ என்னும் உயிர் வந்திருப்பதால், வருமொழி முதலுயிரோடு சேரும்போது, இடையில் வ் என்னும் மெய்வர, அதன்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறு மென்பது நீங்கள் கற்றிருக்கிறவிதியாகும். தருக்கா + அலா = தருக்காவ் அலா = தருக்காவலா.

நான்காவது அடியில்—தருக்கு ஆ அலா, எனப் பிரியும். தருக்கு என்பது மூன்றாவது அடியின் கடையிலுள்ள 'பத்' என்பதோடுசேர்ந்து பத்தருக்கு என ஆகும். அப்புறம் வரும், ஆ என்பது ஆக என்னும் வினையெச்சத்தின் ஈறுகெட்ட உருவமாகும். (வால்யூம் 1-130-வது பக்கம். வால்யூம் 2—787-வது பக்கம்.) அலா, என்பன பின்வரும் 'யுதன் என்பவைகளோடு சேர்ந்து 'அலாயுதன்' எனப் பலராமனைக் குறிக்கும் சொல்லாயின. ஹலம், என்ற வடமொழிக்குக் கலப்பை என்பது அர்த்தம், அது, தமிழில் (ஹரி, அரி என வருவதுபோல்) அலம், என்றாயிற்று. அலம் + ஆயுதன், என்னும் இரண்டு சொற்களும் சமஸ்கிருத மாகையால் அப்பாஷை இலக்கணத்தின் படி அலாயுதன் எனப் புணர்ந்தன.

குறிப்பு:—சென்ற ஆண்டு 37வது இதழிலிருந்து 52 வது இதழ்வரையில், பெயர்ச்சொற்கள் அடையக்கூடிய வேற்றுமைகள், அவ்வேற்றுமைகளுக்குரிய பொருள்கள், உருபுகள், முதலியனவற்றைப்பற்றி விளக்கினோம். அப்பாடங்களில், ஒவ்வொரு வேற்றுமைக்கும் தனித்தனி உருபுகள் வந்து அவ்வவ்வேற்றுமைக்குரிய பொருளைக்குறிக்கும் என்பதைக் காட்டினோம். கு, என்பது நான்காம் வேற்றுமை உருபு. இந்த உருபு ஒரு பெயர்ச்சொல்லோடு சேருமாயின், அந்தச்சொல் நான்காம்வேற்றுமையடைந்து, கொடை, பகை, நேர்ச்சி, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை என்னும் பொருள்கள் ஒன்றினில் நிற்கவேண்டும்—(1வது, வால்யூம், 948வது பக்கம்.) எனினும், இந்தப்பாட்டில் 3வது அடியில் வந்துள்ள நெறிக்கு என்னும் சொல் கு உருபு பெற்றும் நான்காம் வேற்றுமைக்குரிய ஏழுபொருள்களில் ஒன்றும் ஏற்கவில்லை, என்பது புலப்படும். நெறியில் திரிவீர், என, ஏழாம் வேற்றுமைக்குரிய இடப்பொருள்தான்

அந்தக் கு உருபிற்கு ஏற்றதாகின்றது. ஆகையால் நெறிக்கு, என்பது நான்காம் வேற்றுமை உருபு பெற்றிருக்கும் சொல்லாயினும் அதனைப் பொருள் நோக்கி, ஏழாம்வேற்றுமை என்றே கூறவேண்டும். பொருள்பற்றி இன்ன வேற்றுமை என்று உணர வேண்டுமேயல்லாது முற்றிலும் உருபையே நம்பலாகாது. இப்படிப் பொருளும்உருபும் வேறு வேறாகப் பொருந்தாமல் வருமாயின் அதனை உருபு மயக்கம் என்பர்.

இலக்கணம்.

இதுவரையில் நிலைமொழி யிறுதியிலும் வருமொழி முதலிலும் உயிர் வருமாயின் அவை புணர்வதற்குரிய விதிகளிற் சிலவற்றைச் சொன்னோம். இவ்விதிகள் அடங்கியுள்ள நன்னூல் சூத்திரத்தை மனப்பாடம் செய்து கொள்வது நலம். அது பின் வருமாறு,

இ ஈ ஐ வழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏ முன் இவ்விருமையும்
உயிர்வரின் உடம்படுமெய் என்று ஆகும்.

இதன் பொருள்:—இ ஈ ஐ வழி - இ ஈ ஐ என்ற நிலைமொழி ஈற்று உயிரெழுத்துக்களில் ஒன்றின் பின், உயிர்வரின் - வருமொழிமுதலில் உயிர் வருமானல், யவ்வும் - ய் என்னும் மெய்யெழுத்தும்; ஏனை உயிர்வழி - இ ஈ ஐ என்னும் உயிர்கள் தவிர மற்ற நிலைமொழி யீற்று உயிர்களின் பின், (உயிர் வரின் - வருமொழி முதலில் உயிர் வருமாயின்) வவ்வும் - வ் என்னும் மெய்யெழுத்தும், ஏமுன் - நிலைமொழி ஏ என்ற உயிரின்பின், இவ்விருமையும் - ய், வ், என்ற இரண்டு மெய்களும், உடம்படுமெய் என்று ஆகும் - உடம்படு மெய்யென்று வருவதாகும்.

இச்சூத்திரத்தில் பொதுவாகக் கூறியிருப்பனவற்றைத் தனித்தனி எடுத்து இதுவரையில் விரித்துக் கூறிவந்தோம். இந்த வ், ய் என்ற மெய்கள், இவ்விதிகளுக்கிணங்கி இரண்டு உயிர்களைச் சேர்க்க வரும் போது, அவைகளை உடம்படுமெய் என்று கூறுவார். உடம்பாடு செய்விக்க வருவதால் அவைகளுக்கு அப் பெயர் வந்தது.

அண்ட புராணம்.

[770 வது பக்கத் தொடர்ச்சி]

கலியுக மாந்தர் சிறப்புப் படலம்.

காலமொரு மூன்றினையுங் கருத்திலுணர் காசிபன்றன்
பாலணைந்து பணிந்தெழுபல் லருந்தவர்கள் பாதமெனுஞ்
சீலமிகு நாட்டுறைவோர் செயறிரிந்து சிதைந்திடுமவ்
வாலகாலக் கொடுங்கலியில் அந்தணர்தஞ் செயலென்னும் 1

என்றலுமே மாமுனியும் இரங்கியுள மினைந்துருகி
நன்றிதுநீர் வினவியதும் நால்வருக்கன் றாலடியிற்
குன்றைவில்லாக் குழைத்தவன் கூறியதை யுள்ளபடி
இன்றுமக்கு யானுரைப்பேன் கேட்டிடுமென் றிசைத்திடு
[வான். 2

ஈனமிகு கலியுகத்தில் எக்குலத்து மக்களுமே
மானமிலாத் தொழில்புரிந்து மனந்தூக்கும் வழியொழுகி
ஊனமென வொழித்திடுவர் உத்தமநல் லொழுக்கமெலாம்
ஆனதொரு காலமதில் அந்தணர்சீர்க் கேடுதனை 3

எடுத்துரைக்க விசைந்திலதென் னுவெனினும் எழில்மறை
அடுத்தொழுகு மாறினர் ஆர்வமுடன் வினவியதை [யை
விடுத்தகற விரவலர்தாம் வேண்டியதொன் றுளமுவந்து
கொடுத்துதவா லோபியர்தங் கொள்கைதனை நிகர்த்திடு
[மால் 4

ஆதலாலின் றுமக்கவர்தம் மறுதொழிலு மறுதொழிலாய்க்
கோதறுநற் குணங்களுடன் குலவொழுக்கந் தனைத்துறந்து
ஏதமுடை இவிழிதொழிலும் நற்றொழிலா மென்றிறங்கிப்
பாதையலாப் பாதைசெலும் பரிசினைநீர் கேட்டிடுமின் 5

வேறு

வானவ ரவிபெற் றன்ன வளர்த்திடு மகங்கள் யாவும்
ஊனமென் றொழித்தே நீப்பர் உள்ளத்தே உயர்ந்த வுண்மை
ஞானம்வந் துதித்தா ரென்ன நாவினி லுடற்று நிற்பர்
மோனமே ஞான மென்று மூதுரை தன்னை மறந்து 6

எழுதரு மறைக ளோதார் எத்தரு வடநூல் கல்லார்
பழுதரு தமிழை நச்சார் பற்பல வேற்று நாட்டு
மொழிதரு மிலக்கி யத்தை முனைந்தனு தினமும் கற்று
உழிதரு முன்னர்த் தேறுர் ஒன்றினு மூன்றி நில்லார் 7

அதுவிது வென்று தேறு மறிவிலா விலங்கே யென்ன
மதுவுடன் கண்டவெல்லாம் மகிழ்ந்துண்டு களித்து வாழ்வர்
பொதுவிலை மாதர் தம்மைப் புதுமணம் புரிந்து கொள்வர்
விதவையை வதுவை யாற்றி விழைந்துறு போகந்துய்ப்பர் 8

இதமுடன் பிறனில் வாழும் வந்திழை யாரைக் கூடல்
துதிபெறு செயலென் றுன்னித் தோதகஞ் சூழ்ந்து நிற்பர்
பதமுறுக் கன்னி மாரை மணத்தலும் பழுதா மென்பர்
விதிமுறை வேட்டலென்றும் வீண்டொலை யென்றேநீர்வர்

வளங்கெழு மறைகள் செப்பும் வாய்மையைப் பொய்யென்
[றன்வர்.
களங்கமில்மூத்தோர் வார்த்தை கசடெனக் கைத்தேதன்வர்
உளங்கொளப் பெற்றோர்கூறு முறுதியை யோரா தென்வர்
விளங்கிழை பணித்த மாற்றம் வேதமே யென்று கொள்வர்

மணமலி சிகையி னோடு மார்பணி நூலும் பேணர்
அணிநுதற் குறிகளொன்றும் அணிந்திடா ரவத்தமென்றே
அணைவுறு கச்ச மாற்றி அரையுடை சுற்றிக் கொள்வர்
குணமறு செலமா மென்று குளநதி குடைந்து மூழ்கார் 11

நிலையாய பேற்றை நல்கு நிமலன்றன் தலங்கள் சென்று
அலையாத மனத்தி னோடு மவன்பதம் நினைந்து நில்லார்
மலையாய விடங்கள் புக்கு மானிட தெய்வ சேவை
உலையாத பக்தி யோடு முஞற்றியே உழன்று நிற்பர் 12

எரியற் பரிகள் பூணு எந்திரத் தேர்மீ தேறி
நாரிய ரோடு சென்று நவவிதக் காட்சி காண்பர்
பூரியர் பொலிந்து மல்கும் புல்லவை புரிந்து சேர்வர்
ஆரிய பவனஞ் சென்ற னூரிய வுண்டி யுண்பர். 13

மலருடைச் செடிக ளொன்றும் வளர்த்திடா ரிலையே மல்கும்
பலநிறச் செடிக டம்மைப் பாங்குறப் போற்றி வைப்பர்
குலமுன்கோத் திரமு மற்றுங் குறித்திடார் பட்டுக் கோல
நலமதே மகளிர் மாட்டு நாடுதற் குரிய வென்பர் 14

ஆராது மளக்க லாகா அருமறைப் பொருளனைத்தும்
நேராக வறிந்தார் போல நியாயங்கள் பலவி கழ்த்திச்
சீரான பழவொ ழுக்கஞ் சிறப்பில வென்று நீக்கி
ஓராத புதுவ ழக்கே உசிதமென் றெழுகா நிற்பர் 15

எவ்வினை யியற்றி யேனும் இருநிதி யீட்டல் செய்வர்
வெவ்வினை புரிய வஞ்சார் வீண்வழக் கிடுத லோவார்
அவ்வியம் வெகுளி யாதி அவகுண நிலைய மாவர்
தெவ்வினை மூண்ட போரிற் சேவகத் தொழிலுஞ் செய்வர்

கல்வியை மதித்தி டாமற் செல்வமே கனமா மென்பர் [வர்
செல்வரைத் தொழுது வாழ்தல் சிறந்தநற் செயலாக்கொள்
நல்வள மில்லா நாடு நமதென யிதனை நச்சார்
பல்வகை யின்பந் துய்க்க மேற்றிசைப் பதிகள் சேர்வர் 17

வேறு

மங்கலமே மனைமாட்சி யென் றுரைத்த வண்புலவன்
வாக்கைத் தள்ளி
அங்கதன்றன் நன்கலமே நன்மக்கட் பேறென்னு
மதையு மெண்ணர்
மங்கையர்தா மகவுயிர்த்தால் மேனியெழில் மங்கியுடல்
மெலிந்து போகும்
தங்காமற் கருச்சிதைக்கத் தக்கபல முறைகளையும்
தவறு தேற்பர். 18

பெண்பாலர் புருடருடன் பேதமின்றிச் சமபதவி
பெறவே வேண்டி
எண்பாலா மிதரமொழிக் கல்விதனி லேற்றமுறப்
பள்ளி யொன்றில்
நண்பாக வாலிபரு நாரியரு முடன்மருவி
நாணம் விட்டு
வெண்பாலர் தமைப்போல விரவியுடன் படிப்பதுவே
விழுமி தென்பர். 19

திருத்தியுறச் சாதிகுலஞ் செல்வநிலை பிறயாவுந்
தேர்ந்து நல்ல
பொருத்தமிகு புருடரைத்தம் புதல்வியர்க்குப்பெற்றோர்கள்
மணந்து போற்றல்

திருத்தமிலாத் தீமணமாம் தெரிவையரே தாம்பழகி
தங்கண் ணுக்குங்
கருத்தினுக்கு மினியாரைக் கைப்பிடித்தல் காசறுநல்
மணமா மென்பர். 20

உடைநடையு மறிகுறியும் பயிறொழிலுங் குலவொழுக்கு
மொருங்கே நீத்துக்
கடனுகுஞ் சந்திசெப மந்திரங்கள் வீண்கரும
மென்றே கைவிட்
டுடலாலும் பிறப்பாலு முயர்குலத்தோ ரெனத்தம்மை
யுலகமேத்த
மடலாரு மலரயனே வகுத்திட்டா னென்பர்
மடமை யென்னே. 21

என்றுரைத்த மாமுனிவனிணைமலர்த்தாள்தொழுதிறைஞ்சி
யிருகை கூப்பி
நின்றவந்த நெடுந்தவரும் நீக்கரிய பாவமிக
நிகழு மந்தக்
குன்றவிலாக் கொடுங்கலியின் காலமதைக் குறுகிடாது
குறிக்கொண் டெம்மைப்
பின்றவிலா நின்னருளால் பேணியரு ளென்றுருகி
யழுதி ரந்தார். 22

மாற்றரிய பெருங்கருணை மாதவனு மவருரைத்த
மாற்றங் கேட்டுத்
தோற்றமதை இனியறவே தொலைத்திடநீர் விரும்பினிரேல்
தோலா வென்றிக்
கூற்றமதைக் குமைத்திட்ட கோமான்றன் குரைகழலே
புணையாக் கொண்டு
சாற்றரிய பிறப்பிறப்பாஞ் சாகரத்தைத் தாண்டிடுமின்
னெனவி சைத்தான். 23

குறிப்பு:—இப்படலம் கர்க்கியர் வாக்காகத் தோன்ற வில்லை. ஸ்ரீமான் இராமசந்திர ஐயாவர்களே இதனையும் அனுப்பினாராஜனும் தற்காலத்தவர் யாரோ இதனை ஏடுகளுக்கிடையே செருகியிருத்தல் வேண்டும்.

அப்பர்

7. அப்பரும் நாடக வியலும்

III. நாடகக் கதை

தற்காலத்தில், நாடகமாக நடத்தப்படும் கதைகள் பெரும்பாலும் அங்கே காட்சிக்கு வருபவர் யாவரும் அறிந்ததேயாம். இதன்றியும் திரைகளை மாற்றுவதும், அவ்வவ் வங்கங்கள் களங்கள் விஷயங்களைச் சுருக்கமாய் அச்சிட்டு வந்தோருக்குத் தருவதும் சாதாரணமாகையால், மேடையில் ஆடுவோரது வார்த்தைகளைக் கேளாவிடினும், செயற்கைத் தொழில்களாலும், நடிப்பதாலும், கதையை விவரமாய் யாவரும் கண்டறிவார். கைலாயத்தில் இராவணன் செருக்கழிந்த கதை, பெரும்பாலும்இக்காலத்தில் ஓவியத்துணையால்நடிக்கப்படும். அதனால் வரும்கேடு, அதிகம். ஓவியத்தில் கண்டதே உண்மையென அதன் குற்றங்களுடன் இதுதான் நிகழ்ந்ததெனச் சிறுவர் நம்புவர். அவ்வாறு மனதிற் குற்றம் பதிந்தபின், அதை மாற்றல் வெகு கடினமான காரியமாம். நமது முன்னோர், இக்காலத்தினர் போல் ஓவியத்தைத் துணைக்கருவியாய்க் கொள்ளச் சக்தியற்றவர்க ளல்லர். அக்கால ஓவியமேன்மை யிக்காலத்திலில்லை. ஆயினும் அதை அவர் சிறந்த வழியெனக் கொள்ளாது கூத்தாடு முதல்வரே கதையை ஓவிய உதவியின்றிப் பாடிப்பாடி நடித்து நடத்துவர். இவ்வழக்கத்தை இன்றும் கிராமங்களில் தெருக்கூத்து நடக்கும்போது காணலாகும்.

785ம் பக்கத் தொடர்ச்சி

சிவனருள் மேன்மையே விளக்கும் கதைகள் பலவுள. அவற்றுள் இராவணன் இமயமலையின் வழியாய்ச் செல்லும்போது விமானம் தடைபடக் கைலைமலையைப் பேர்த்தெறியச் சென்ற செருக்கும், அவன் அதனடியில், பரமன் விரலூன்றிய மாத்திரத்தில் சிதைந்து நைந்ததும், பிறகு சிவபெருமான் அருள் பெறக் கீதம் பாடியதும், வேண்டும் வரம்பெற்றுச் சென்றதுமாம். இக்கதையைப் பெரும்பாலும் ஒவ்வொரு பதிகத்திற்குந்திருக்கடைக்காப்புச்செய்யுளில் அப்பர்தேவாரத்திற் காண்கின்றோம். சேக்கிழாரும்,

“ அத்தன்மை யனைய விராவணனுக்
கருளுங் கருணைத் திறமானவதன்
மெய்த்தன்மை யறிந்து துதிப்பதுவே
மேற்கொண்டு வணங்கினர் மெய்யுறவே ”

என்றார். திருநாவுக்கரசுநாயனார் பதிகங்களிற் சில, நாடகவிலக்கியத்திற்கு மாணிக்கங்களாய் விளங்குகின்றன. அவற்றுள் இக்கதையைப் நடித்துக் காட்டப் பயன்படுவன, திருமறைக்காடு–திருநேரிசை, திருக்கைலாயம்–திருநேரிசை, திரு அவனிவனல்லூர்–திருநேரிசை, என்னும் திருப்பதிகங்களாம். அவற்றைச் சற்று விவரமாய் ஆராய்வோம்:—

திருமறைக்காடு திருநேரிசையென்னும் பத்துப்பாசுரங்களமைந்த இத்திருப்பதிகம் வேதாரண்யத்தில் அப்பர், சம்பந்தருடன் வீற்றிருந்த காலத்தில் பாடப்பட்டதென நாம் கொள்ளலாகும். இப்பதிகம் முத்தமிழின் அரிய இலக்கணங்கள் வாய்ந்து விளங்குகின்றது. "அவனன்றி யோரணுவு மசையாது" என்னும் மேலோர் மொழியை இப்பதிகத் திருக்கடைக்காப்புச் செய்யுள் விளக்கும்:—

"கங்கைநீர் சடையுள்வைக்கக்
காண்டலு மங்கை யூடத்
தென்கையால் தேர்க டாவிச்
சென்றெடுத் தான்மலையை
முன்கையா னரம்புவெட்டி
முன்னிருக் கிசைகள்பாட
அங்கைவா ளருளினனு
ரணிமறைக் காடுதானே"

திருக்கைலாயத்தில் உமாதேவியார் ஊடலைத் தணிக்கும்பொருட்டு இராவணன் கைலாயத்தைப் பேர்த்தெடுக்குமாறு சிவபத்தனை இராவணனுக்கும் மனம் வந்தது முழுமுதற் கடவுட் செயலன்றோ? ஊடலைச் சிறப்பித்துக்காட்டும் அகப்பொருள் நயம் நாடகத்திலும் தமிழிற் காணப்படும் என்பதற்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டலாகும்.

இவ்வாறு உமையவள் ஊட,

தேரையு மேல் கடாவித் திண்ணமாத் தெளிந்து நோக்கி
யாரையு மேலுணரா வாண்மையான் மிக்கான் றன்னைப்
பாரையும் விண்ணு மஞ்சப் பரந்தோன் முடிய டர்த்துக்
"காரிகை! யஞ்சல்" என்பார் கலிமறைக் காட னாரே.

உமாதேவியார் ஊடல், பயத்தால் மறைந்தது. அப்பயத்தை தவிர்த்தவுடன் இறைவன் எண்ணம் முடிந்தது. இதனாலேயே அரக்கனது துஷ்டசெய்கைக்குக் கோபிக்காது புன்னகை செய்தனரென்பது விளக்குமாறு, இப்பதிகத்தில் 2-வது * செய்யுளில் "நக்கிருந்தூன்றிச்சென்னி நாண்மதி வைத்த வெந்தை" என்றார். முக்கி, வெருண்டு அரக்கன் கைலையை யெடுத்தல் நாடகத்தின் இயற்கை நிலைகளை வெளியாக்கும்.

இப்பதிகத்தின் மூன்றாஞ் செய்யுள் இராவணன் அகங்காரத்தை வெளியிட்டு இது யாவருங்கண்டு நகைக்கத்தகும் காரியமென்ன திருநாவுக்கரசு திருவாய்மலர்ந் தருளினர்:—

மிகப்பெருத் துலாவமிக்கா னக்கொரு தேர்கடாவி
யகப்படுத் தென்றுதானு மாண்மையால் மிக்கரக்கன்
உகைத்தெடுத் தான்மலையை யூன்றலு மவனையாங்கே
நகைப்படுத் தருளினானூர் நான்மறைக் காடுதானே.

அரக்கன் ஆணவத்தால் கைலையில் சிதையப் பிறர் கண்டு நகைக்கவும், இவனுக்குச் சிந்தனை, ஏக்கம், தேக பின்னம், மேலிட இவன் தன் வாய்விட்டுக் கதறவும் பூதகணங்கள் சிரித்தன என்னும் விஷயம் 4, 5, 6, 7, 8-பாசுரங்களில் வர்ணிக்கப்படுகின்றன.

* முக்கிமுன் வெருண்டெடுத்த முடியுடை யரக்கர் கோனை
நக்கிருந் தூன்றிச் சென்னி நாண்மதி வைத்த வெந்தை
யக்கர் ஆரமும் பூண்ட வழகனூர் கருத்தி னாலே
தெக்குநீர் திரைகள் மோதும் திருமறைக் காட னாரே
— திருமறைக்காடு - திருநேரிசை 2

அந்தரத் தேர்கடாவி யாரிவ னென்றுசொல்லி
யுந்தினன் மாமலையை யூன்றலு மொள்ளரக்கன்
பந்தமாம் தலைகள்பத்தும் வாய்கள்விட் டலறிவீழச்
சிந்தனை செய்துவிட்டார் திருமறைக்காட னாரே (4)

தடுக்கவுந் தாங்கவொண்ணாத் தன்வலி யுடையனாகிக்
கடுக்கவோர் தேர்கடாவிக் கையிரு பதுகளாலு
மெடுப்பனு னென்னப்பண்ட மென்றெடுத் தானையேங்க
வடுக்கவே வல்லனூரா மணிமறைக் காடுதானே (5)

நாண்முடிக் கின்றசீரா னடுங்கியோ மீதுபோகான்
கோன்பிடித் தார்த்தகையான் கொடியன்மா வலியனென்று
நீண்முடிச் சடையர்சேரு நீள்வரை யெடுக்கலுற்றான்
றோண்முடி நெரியவைத்தார்தொன்மறைக் காடனாரே (6)

பத்துவா யிரட்டிக்கைக ளுடையன்மா வலிய னென்று
பொத்திவாய் தீமை செய்த பொருவலி யரக்கர்கோனைக்
கத்திவாய் கதறவன்று கால்விர லூன்றியிட்டார்
முத்துவாய்த் திரைகள்மோது முதுமறைக் காடனாரே (7)

பக்கமே விட்டகையான் பாங்கிலா மதியனாகிப்
புக்கனன் மாமலைக்கீழ்ப் போதுமா றறியமாட்டான்
மிக்கமா மதிகள்கெட்டு வீழ மிழந்தவாறே
நக்கன பூதமெல்லா நான்மறைக் காடனாரே (8)
—திருமறைக்காடு-திருநேரிசை

இவற்றின் சாரமே 9-ம் பாசுரத்தில்,

நாணஞ்சு கையனாகி நன்முடி பத்தினோடு
பாணஞ்சு முன்னிழந்து பாங்கிலா மதியனாகி
நீணஞ்சு தானுணரா நின்றெடுத் தானையன்று
வேணஞ்சு கைகள்செய்தாரெழின்மறைக் காடனாரே

என்று விளக்கப்பட்டது.

இனி, திரு அவளிவணல்லூர் திருநேரிசை என்னும் திருப்பதிகத்தின் நாடகவியலைக் காண்போம்.

நாடகமாடும் கூத்தன் ஒருமுறை கூறுவதைப் பதின்முறை வந்தவர்கள் மனதிற் பதியுமாறு மொழிவன். இது கூறியதுகூறலென்னும் குற்றத்தின்பாற் படாது. ஒரே விஷயத்தைக் குறிக்கும் பற்பல விடங்களைத் தொகுத்துச்சுட்டி வகுத்துக்காட்டுவித்தல் நாடகக்கவியின் ஏற்றமாகும். அவ்வாறே இப்பதிகத்தில் முதற்பாசுரத்திலும் இரண்டாம் பாசுரத்திலும், தொகுத்துக்காட்டப்பட்டன யாவை என்று ஆராய்வோம்:—

தோற்றினா னெயிறு கவ்வித்
தொழிலுடை யரக்கன் றன்னைத்
தேற்றுவான் சென்று சொல்லச்
சிக்கெனத் தவிரு மென்று
வீற்றினை யுடைய னாகி
வெடுவெடுத் தெழுந்த வன்றன்
ஆற்றலை யழிக்க வல்ல
ரவளிவ ணல்லூ ராரே.

வெம்பினா ரரக்க ரெல்லா
மிகச்சழக் காயிற் றென்று
செம்பினா லெடுத்த கோயில்
சிக்கெனச் சிதையு மென்ன
நம்பினா ரென்று சொல்லி
நன்மையான் மிக்கு நோக்கி
யம்பினா லழிய வெய்தா
ரவளிவ ணல்லூ ராரே.

எஞ்சிய எட்டுச்செய்யுட்களும், எயிறுகவ்வி, தொழிலுடையரக்கன், தேற்றுவான் சிக்கெனத்தவிரும், வீற்றினையுடையன், வெடுவெடுத் தெழுந்தான், ஆற்றலை

யழிக்கவல்லார், வெம்பினாரரக்கர் என்னும் சொற்றொடர்களின் விளக்கமாகும்.

அவை வருமாறு:—

"எயிறுகவ்வி" மேற்சென்ற இராவணன் வர்ணனை,

கீழ்படக் கருதலாமோ கீர்த்திமை யுள்ள தாகில்
தோட்பெரு வலியினாலே தொலைப்பன்நான்மலையை [யென்று
வேட்பட வைத்தவாறே விதிவிதிர்த் தரக்கன் வீழ்ந்து
ஆட்படக் கருதிப் புக்கா ரவளிவண் நல்லூராரே 3.

"தொழிலுடை யரக்கன்" தொழில் நல்வழிச் செல்லாதது என்பதை

நிலைவலம் வல்லனல்ல னேர்மையை நினைய மாட்டேன்
சிலைவலம் கொண்ட செல்வன் சீரிய கயிலை தன்னைத்
தலைவலங் கருதிப் புக்குத் தாக்கினான் றன்னை யன்று
அலைகுலை யாக்கி வைத்தா ரவளிவ ணல்லூ ராரே! 4

"தேற்றுவான்"

தவ்வலி யொன்ற னாகித் தனதொரு பெருமை யாலே
மெய்வலியுடையனென்றுமிகப்பெருந்தேரையூர்ந்து
செவ்வலி கூர்வி ழியாற் சிரமத்தா லெடுக்குற் றானை
யவ்வலி தீர்க்க வல்லா ரவளிவ ணல்லூ ராரே 5.

"சிக்கெனத்தவிரும்"

நன்மைதா னறிய மாட்டா
னடுவிலா வரக்கர் கோமான்
வன்மையே கருதிச் சென்று
வலிதனைச் செலுத்த லுற்றுக்
கன்மையான் மலையை யோடிக்
கருதித்தா னெடுத்து வாயால்
அம்மையோ வென்ன வைத்தார்
அவளிவ ணல்லூ ராரே! 6.

"வீற்றினையுடையன்"

கதம்படப் போது வார்கள் போதுமக் கருத்தி னாலே
சிதம்பட நின்ற நீர்கள் சிக்கெனத் தவிரு மென்று
மதம்படு மனத்த னாகி வன்மையான் மிக்கு நோக்கி
யதம்பழத் துருவு செய்தா ரவளிவ ணல்லூ ராரே 7.

"வெடுவெடுத்தெழுந்தவன்"

நாடுமிக் குழிதர் கின்ற நடுவிலா வரக்கர் கோனை
யோடுமிக் கென்று சொல்லி யூன்றினா னுகிரி னாலே
பாடுமிக் குய்வ னென்று பணியநற் றிறங்கள் காட்டி
நாடுமிக் காவம் பூண்டா ரவளிவ ணல்லூ ராரே 8.

"ஆற்றலை யழிக்கவல்லார்"

ஏனமா யிடந்த மாலு மெழில்தரு முளரி யானு
ஞானந்தா னுடைய ராகி நன்மையை யறிய மாட்டார்
சேனந்தா னிலாவ ரக்கன் செழுவரை யெடுக்க லூன்றி
யானந்த வருள்கள் செய்தா ரவளிவ ணல்லூ ராரே 9.

"வெம்பினாரரக்கர்"

ஊக்கினான் மலையையோடி யுணர்விலா வரக்கன் றன்
தாக்கினான் விரலினாலே தலைபத்தும் தகரவூன்றி [னைத்
நோக்கினா னஞ்சத்தன்னை நோன்பிற லூன்றிச்சொல்லி
யாக்கினா னமுதமாக வவளிவ ணல்லூ ராரே 10.

இவ்வாறு ஒரு சங்கதியைப் பலபாக்களிற் பற்பல பாகங்களாக்கி அதன் ஒவ்வொரு பாகமும் எழிற்பட விளக்குவதால் கூறியதுகூறலென்னும் குற்றம்வர இடமில்லை. கதாநாயகனாகிய தலைவன் நற்குணங்களை முறையே இப்பாசுரங்கள் வெளியாக்கும். அளவற்ற பராக்கிரமசக்தி யொன்றாலே, இத்தலைவனை நாம் வணங்க வேண்டுவதில்லை; இவர் நோக்கு நன்மை, ஆன்மாக்களை நல்லவழியில் திருத்தி யாட்கொள்ளல் முதலியன இவர் பண்பு என்றும், எவ்வளவு சக்தியும் எத்தகைய வலிவையு மடக்கிப் பழம்நசுங்குண்டு போவதுபோல் இவர் சக்திஇராவணனையும் நசுங்கச் செய்தது என்றும்இப்பதிகம்கூறும். மற்றும்சிலசெய்யுள் குற்றம்செய்யினும் உய்வுண்டு, அது எத்தகைய குற்றமாயினும் சரி, செய்தோன் பணிவனாயின் "நற்றிறங்கள்" காட்டப்பெற்று உய்வன் என்றும், ஞானமற்ற செய்கை அரி பிரமன் முதலானோர்க்கும் உண்டென்னில் அரக்கனுக் கமைந்தது சகஜமென்றும், சிவனையடையப்பெறும் நஞ்சும்அமுதமாகுமென்றும் இத்திருப்பதிகம் முடிகின்றது.

இவ்வாறு பாடிய செய்யுட்களை முறையே திரும்பித் திருப்பி வந்து கூத்தன் அரங்கின் வெளிப்பக்கத்தில் பாடுவானாயின், இந்நாடகக்கதைக் காண்போர் மனதில் நன்கு பதிவதுடன் தலைவன் மங்கள குணங்கள் சிறப்புற்றுக் காணப்படும். இவற்றைக் கூத்தன் ஆடிக்காட்டும்போது காண்போர் யாவரும் தலைமாணாக்கர் இலக்கணத்துடன் சித்திரப்பாவையென, வடங்கிக் கல்விகற்க வருபவரல்லர்: விளையாட்டாய்ப் பொழுதுபோக்கவே வருபவர்களாதலால், நாடகப்போதகம் அவர்கள் புத்திக்கு அதிக சிரமம் வைக்கக்கூடாது; நகைப்புக்கு இடமாயும், முதலில் சாந்தமாய் ஆரம்பித்துப் பிறகு மிடுக்கைக்காட்டும் தன்மையதாயும், இதில் ஊட்டும் பாடம் ஜீரணசக்தி யற்றவர்க்கும் பயன்படுமாறும் திராவகமென நீரிற்கலந்தாங்கு பாடியாடவேண்டியது கூத்தன்கடமையாகும். இத்தகைய ஆடல்பாடலைக் காட்டத் திருக்கைலாயம்-திருநேரிசை யென்னும் அப்பர் பதிகம் உதாரணமாம்.

அகத்தியமுனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி:— முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற்குறித்தாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல், பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம்பிள்ளை யவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை 12 அணா.

சி. பி. சார்ஜ் வேறு. கலாநிலயம், வேப்பேரி, சென்னை.

லியோ டால்ஸ்டாய் எழுதிய

அரசன் அஸர்ஹாதன்.

King Assarhaddon, by Count leo Tolstoy.

அஸ்ஸிரிய நாட்டரசன் அஸர்ஹாதன் தன் எதிரியாகிய லேய்லி என்னும் அரசனது ராஜ்யத்தை ஜயித்து, நாடுநகர்க ளனைத்தையும் சூறையாடித் தீக்கிரையிட்டுச் சகலஜனங்களையும் அவர்களுடைய சுயதேசத்தைவிட்டு அப்புறப்படுத்தித் தன் நாட்டுக்குள் துரத்தி யுத்தவீரர்களில் ஒருவருமெஞ்சாமல் எல்லோரையும் வதைத்தான். சில வீரர்களைச் சிரச்சேதம் செய்தான்; சிலரைக் கழுவேற்றினன்: மற்றும்சிலரை உயிருடன் தோலையுரித்துச் சித்ர ஹிம்ஸை செய்யலானன். கடைசியில் அவர் மன்னனாகிய லேய்லியையும் ஒரு கூண்டில் அடைத்தான்.

இரவில் தன் படுக்கையில் சாய்ந்துகொண்டு அஸர்ஹாதன், லேய்லியை எவ்வாறு வதைக்கலாம், எவ்வகையில் தூக்கிடலாம் என்று ஆலோசனைசெய்து கொண்டிருந்தான். திடீரென அவன் பக்கத்தில் ஏதோ சப்தமொன்று கேட்கக் கண்விழித்துப் பார்த்தான். நல்ல சாந்தகுணமும் அருள்பொழியும் விழிகளுமுடைய ஒரு பெரியார் நீண்டுநரைத்த தாடியுடன் தன்முன் நிற்கக்கண்டான்.

“லேய்லியைத் தூக்கிலிட்டு வதைக்க விரும்புகின்றனையோ, நீ?” என அப்பெரியார் கேட்டார்.

ஆம், ஆனல், எவ்வெவ் வகைகளில் அவனை வதைசெய்வது. எவ்விதம் அவன் உயிரை மாய்ப்பது என்னும் வழிகளைமாத்திரம் இன்னும் நிர்ணயிக்கவில்லை” என்றான் அஸர்ஹாதன்.

“ஆனல் நீ இப்போது சொன்னாயே, லேய்லி, அந்த லேய்லி—உன்னையன்றி வேறில்லை. நீ தான் அந்த லேய்லி” என்றார் அப்பெரியார்.

“வீண்பொய்.நான் நான்தான்;லேய்லி லேய்லிதான் நான் எப்படி லேய்லியாவேன்?”

மீண்டும் அப்பெரியார் “நீயும் லேய்லியும் ஒருவரே. நீ லேய்லி யல்லனென்பதும், லேய்லி நீ யல்லனென்பதும் வெறுந் தோற்றமே; உன் புத்திமாருட்டமேயொழிய வேறொன்றன்று”

“தோற்றமா? வேறெவ்விதம் இருக்கமுடியும்? இதோ பஞ்சணைப் பள்ளியின்மீது இனிதே மிருதுவாய்ப் படுத்துக்கொண் டிருக்கின்றேன் யான். என்னைச் சுற்றிலும் கைகட்டி வாய்பொத்தி எனது ஆண் அடிமைகளும் பெண் ணடிமைகளும் குற்றேவல் புரிந்துகொண் டிருக்கின்றனர். இன்றுபோலவே நாளைக்கும் நான் குதூகலமாய் என் நண்பர்களுடன் விருந்துண்டு கேளிக்கைக் கூத்துக்களால் களித்திருக்கப் போகிறேன். லேய்லியோ உடல்நடுங்கி உயிர் ஓடுங்கிப் பொறியிலகப்பட்ட பறவைபோல் தவித்துக்கொண் டிருக்கிறான். நாளைபதினம் கழுவிலேற்றப்பட்டு நா வெளியிலே தொங்க உயிர்நீங்கு மட்டும் சொல்லொணாத ஹிம்ஸைகளும் துன்பங்களும் அநுபவித்துச் செத்துக்கிடந்து நாயும் நரியும் கிழித்தெறியச் சிதைந் தழிந்துபோகப் போகிறான். நானும் அவனும் ஒருவரே என வாய்க்கே எளிதாகச் சொல்லிவிட்டீர்களே?”

“அவன் உயிரை உன்னல் ஒருபோதும் நாசம் செய்யமுடியாது”

என்ன? பதினாலாயிரம் போர்வீரர்களை மடித்துப் பிணக்குவியலாக்கி நிணக்கோரி கட்டியிருக்கின்றேனே? அவர்களனைவரும் சாய்ந்தவிடம் புல்முளைத்துப்போய்விட நான் இதோ சகலசுகங்களையும் அநுபவித்துக்கொண்டு உயிருடன் இருக்கின்றேன் ஆகையால் உயிர்களை யழிப்பது என்னல் சாத்யமான காரியமென்று தெரியவில்லையா?”

“அவர்கள் அழிந்து விட்டார்கள் என்று நீ எவ்வாறு அறிந்தனை?”

“ஏதோ! அவர்களுள் ஒருவர்கூட, என்முன் இல்லையே? மேலும், அவர்கள் எவ்வளவோ சித்ரவதையெல்லாம் அநுபவித்தார்களே? நான் ஒன்றும் அநுபவிக்கவில்லையே? அவர்கள் பாடெல்லாம் அவலமாய் முடிந்துவிட்டிருக்க நான் சீரும்சிறப்புமாய் இருக்கவில்லையா?”

“இதுவும் வெறும் தோற்றமே. உண்மையில் வதையுற்றவன் நீதான். சித்ர ஹிம்ஸைகள் பட்டவன் உன்னையன்றி அவர்கள் அல்லர்”

“தாங்கள் சொல்வது விளங்கவில்லையே?”

“விளங்கும்படி அறிவிக்கட்டுமா?”

“அறிவியுங்கள்.”

“அப்படியானல் இங்கே வா’! என்று அப்பெரியார் அவ்வரசனை ஜலம்நிறைந்த ஒரு ஸ்நானத்தொட்டியண்டை யழைத்துச்சென்று, ஆடைகளையகற்றி, “இந்தத் தொட்டியில் உட்கார்” என்றார். அரசனும் பெரியார் கட்டளைப்படி செய்தான்.

“சரி, நான் இந்தச் செம்பிலிருக்கும் ஜலத்தை உன் தலையில் கொட்ட ஆரம்பிக்கும்போது நீ உன் தலையை நன்றாய் நீரில் அமிழ்த்திக்கொள்” என்று கூறி அம்மஹான் செம்பை அரசனுடைய தலைக்கு நேராகத் தூக்கினர். அஸர்ஹாதன் தலையை நீரினுள் அமிழ்த்திய அக்கணமே தான் அஸர்ஹாதன் அல்லன், வேறொரு மனிதனென அவன் புத்திக்குத் தோன்றலாயிற்று. இவ்வாறு தான் ஒரு வேற்று மனிதனாகவும், தான் ஒரு நவரத்ன கசித மஞ்சத்தில் படுத்திருக்கத் தன் மருங்கு அழகிற் சிறந்த இளம்பருவ மாது ஒருத்தி சயனித்திருப்பதாகவும் அவன் கண்டான். அம்மாது தலையைத் தூக்கி “என் ஆசை மணாளரே, நாதா, எனதாருயிர் லேய்லி, தாங்கள் நேற்று அதிக சிரமப்பட்டு நெடுநேரம் வேலை செய்ததால் வழக்கத்துக்கு அதிகமாய் உறங்கிவிட்டீர். தங்களுடைய நித்திரைக்குப் பங்கம் ஏற்படாமல் காத்துத் தங்களை எழுப்புவதற்கும் யான் பிரயத்னப்படவில்லை. ஸபாமண்டபத்தில் சிற்றரசர்கள் தங்கள் தரிசனத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்” எழுந்திருங்கள் என்று இனிய குரலில் உரைத்தாள்.

இம்மொழிகளைச் செவிசாய்த்துக்கேட்ட அஸர்ஹாதன் தான் லேய்லியென உணர்ந்தான். இது அவ

னுக்கு ஓர் அதிசயமாகத் தோற்றவில்லை; இதுவரைக்கும் இந்த விஷயம் தனக்குத் தெரியாதுபோயிற்றே என்பதுதான் அவனுக்கு அதிசயமாகத் தோன்றியது. உடனே அவன் விரைந்தெழுந்து உடைதரித்துச் சபாமண்டபத்துள் பிரவேசிக்கிறான்.

சிற்றரசர்கள் அனைவரும் தலை குனிந்து தமது மஹாராஜா லேய்லியை உபசரித்து வரவேற்று அவர் கட்டளையிட மறுபடியும் தமது ஆஸனங்களில் அமர்ந்தனர். அச்சபையில் அமர்ந்திருந்தார்களுள் வயதில்முதிர்ந்த சிற்றரசரொருவர் எழுந்து‘பிரபூ அந்தக் கொடுங்கோன்மன்னன், துராத்மா, அஸர்ஹாதன் செய்யும் கொடுமைகளையும் பழிபாவங்களையும் இனிப் பொறுக்க ஆவதில்லை. அவனை யெதிர்த்துப் போர்புரிவதே ஏற்ற கருமமாகும்’ என்று அழுத்தமாய்ப் பேசுகிறார். லேய்லிஒப்பவில்லை; அஸர்ஹாதனைச்சமாதானஞ் செய்து அவனைத் திருப்திசெய்விக்கத் தூதர்களை யனுப்புவதாகத் தீர்மானித்துச் சிற்றரசர்களை அனுப்பிவிடுகிறான். தக்க பெரியார்களையும் பிரபுக்களையும் தூதர்களாக நியமித்து அஸர்ஹாதனிடம் சென்று அவர் அறிவிக்க வேண்டியனவற்றை அவர்களுக்குத் தெளிவாகச் சொல்கிறான். இந்த வேலை முடிந்தவுடன் அஸர்ஹாதன் எழுந்து இன்னும் தான் லேய்லியெனவே பாவித்துக் காட்டுக் கழுதைகளை வேட்டையாட மலைக்காட்டினுள் செல்கிறான். வேட்டை சிறப்பாக நடைபெறுகிறது. அரசன் தன் கையாலேயே இரண்டு கழுதைகளைக் கொன்று வீடுதிரும்பி நாட்டியப் பெண்கள் நடனமாட நண்பர்களுடன் விருந்துண்கிறான். மறுநாளும் வழக்கம்போல் குற்றவாளிகள் மனுதாரிகள் வாதிகள் காத்திருக்கும் மண்டபஞ்சென்று வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புகள் சொல்கிறான்.

நியாய விசாரணையை முடித்துக்கொண்டு அவன் மறுபடியும் தனது மனதுக்கிசைந்த வேட்டைத் தொழிலுக்குப் புறப்படுகிறான். காட்டில் ஒரு கிழப் பெண்சிங்கத்தைக் கொன்று அதன் குட்டிகள் இரண்டையும் சிறைகொள்கிறான். வேட்டை முடிந்தவுடன் நண்பர்களுடன் குதூகலமாய் விருந்துண்டு கீதம் நாட்டியும் முதலியனவற்றை அநுபவித்துவிட்டுத் தன் பிரியநாயகியுடன் இரவைக் கழிக்கிறான்.

இவ்வாறு ராஜகாரியங்களென்ன, தனது கேளிக்கைக்கூத்து விருந்துகளென்ன, இவற்றினிடைக்காலங் கழித்துக்கொண்டு தினக்கணக்காகவும் வாரக்கணக்காகவும் தான் அஸர்ஹாதனுக்கு (அதாவது பூர்வத்தில் அஸர்ஹாதனயிருந்தவன் இவனே) அனுப்பிய தூதர்களின் வருகையை எதிர்பார்த்திருந்தான். தூதர்கள் ஒருமாதகாலங் கழித்துத்தான் வருகிறார்கள்; ஒவ்வொருவரும் காதுகளும் மூக்கும் அறுக்கப்பட்டுத் திரும்புகிறார்கள்.

தூதர்கள் திரும்பிய உடனே வெள்ளியிலும் தங்கத்திலும், வைரங்கள் முதலிய வகைகளிலும் தான் குறித்த அப்பணத்தைக் கைக்கொண்டு நேரில் வந்து தன்னை வணங்காவிட்டால் தூதர்களுக்கான கதியே லேய்லிக்கும் ஆகுமென அஸர்ஹாதன் கட்டளையிட் டனுப்பினன்.

லேய்லி மறுபடியும் சிற்றரசர்களைக் கூட்டுவித்து மேலே நடத்தவேண்டியதைப்பற்றி அவர்களுடன் கலந்து யோசிக்கிறான்.

எல்லோரும் ஒருமனதாய், அஸர்ஹாதன் படையெடுத்து வருமுன்னர்த் தாங்களே அவன்மீது போருக்குக் கிளம்பவேண்டுமெனத் தீர்மானிக்கிறார்கள். அரசனும் அவ்வுரையை ஆமோதித்து யுத்தத்திற்குக் கிளம்புகிறான். யுத்தம் ஆரம்பித்து ஏழுநாள் வெகு கடுமையாய் நடந்துவருகின்றது. நாடோறும் அரசன் சேனைகளைப் போய்ப் பார்த்துப் போர்வீரர்களுக்கு ஊக்கமூட்டி வருகிறான். எட்டாம் நாளன்று ஒரு நதியின்கரையில் ஒருபெரிய பள்ளத்தாக்கில் லெய்லியின் சேனையும் அஸர்ஹாதன் சேனையும் கைகலந்து யுத்தஞ்செய்தனர். லேய்லியின் வீரர்கள் அதிக தைரியத்துடன் போர்புரிந்து வந்தனர். ஆயினும் தன் சத்ருக்கள் புற்றீசல்களைப் போல் ஆயிரக்கணக்காய் மலைச்சாரல்களிலிருந்து இழிந்து பள்ளத்தாக்கில் கூடித் தனது சேனையைக் கொல்வதைக்கண்டு அஸர்ஹாதனயிருந்த லேய்லி தனது ரதத்திலேறி நடுச்சண்டையில் சென்று சத்ருக்களின் தளவரிசைகளைச் சின்னபின்னப் படுத்துகின்றான். ஆனல் லேய்லியின் சேனையோ சொற்பமாயிருக்க, அஸர்ஹாதினின் சேனை ஆயிரக் கணக்காக அதிகரித்திருக்கிறார்கள். லேய்லி தான் காயப்பட்டுச் சிறைபற்றப் பட்டதாக நினைக்கிறான். ஒன்பது தினங்கள் கைகள் கட்டப்பட்டு மற்ற கைதிகளுடன் அஸர்ஹாதன்போர்வீரர்களது காவலில் நடந்துசெல்கிறான். பத்தாம் நாளன்று நினெவ் நகரம் கொண்டு செல்லப்பட்டுக் கூண்டில் அடைபடுகிறான் லேய்லி பசியாலும் உடம்பில் பட்டுள்ள காயங்களாலும் சிறிதும் வருத்தமுறவில்லை; அவமானத்தாலும் தன் மனதில்எழும் பயனற்ற ஆத்திரத்தாலும் மனக்கொதிப்பாலும் அவன் பெரிதும் வருந்துகின்றான். தான்படும் கஷ்டங்களுக்கெல்லாம் ஒன்று பத்து நூறு ஆயிரமாகப் பதிலுக்குப்பதில் செய்யும்வகையும் ஆற்றலுமின்றி மனம் வெதிர்ந்துகொள்கிறான். தன் அவஸ்தையைப் பார்த்துத் தனது பகைவர் நகைக்க இடங்கொடுக்கக்கூடாதெனத் தீர்மானித்துத் தனக்கு வருவதையெல்லாம் முணுமுணுப்பின்றி ஆண்மகனைப் போல் பொறுத்திருக்கவேண்டுமென நிச்சயஞ் செய்கிறான். மறு நிமிஷம் மரணத்தை எதிர்பார்த்தவனாய் இருபது நாளளவு கூண்டில் அடைபட்டுக் கிடந்தான். தினந்தோறும் தனது நண்பர்களும் உறவினர்களும் தூக்குமேடைக்குச் செல்வதை வருத்தத்துடன் காண்கிறான்; சிலர் கை கால் துண்டிக்கபட்டும் சிலர் தோலுரிக்கபட்டும் இன்னும் பல்வேறு வகை ஹிம்ஸை செய்யப்பட்டும் மரணமடைவதைக்கண்டும் மரணகாலத்தில் மனம் பிளக்கும்படி அவர்கள் கதறுவதைக் கேட்டும், முகத்தில் வருத்தக்குறி துக்கக்குறி பரிதாபக்குறி யாதொன்று மின்றித் தீர்மானத்துடன் சஹித்துவருகிறான்.

தனது அழகிய மனைவியை அலிகள் இருவர் கைப்பற்றி இழுத்துவருவதைக் காண்கிறான்; அஸர்ஹாதனிடம் அடிமையாக அவள் கொண்டுசெல்லப் படுகிறாளென்று உணர்ந்தும் வாய்திறவாமல் அக்காட்சியையும் கண்டு நிற்கிறான். ஆனல் அத்தருணம் அவனைக் காத்திருந்த காவலாளிகளில் ஒருவன் “லேய்லி, உன் கதி என்ன! ஒருகாலத்தில் அரசனயிருந்த உனக்கு இப்போது கூண்டிலகப்பட்ட பக்ஷிபோல் கதறுங்காலம் வந்ததே!” என்றுசொல்லத் தனது பூர்

வீக உயரியநிலை அவன் நினைவிற்குவரப் பிராணனை விட்டுவிடலாமென்று தனது கூண்டின் கம்பிகளின்மீது தலையை மோதிக்கொள்கிறான். உடம்பில் போதுமான சக்தியில்லாமையால் கதறிக்கொண்டே மனத்தளர்ச்சியுற்றுக் கூண்டின் அடிப்பலகையின் மீது வீழ்கிறான்.

அத்தருணம் கொலையாளிகள் இருவர் கூண்டின் கதவைத் திறந்து அவன் கைகளைப் பின்பக்கம் இழுத்து இறுகக்கட்டி உதிரம் ஓடிக்கொண்டிருக்கும் தூக்குமேடைக்குக் கூட்டிச்சென்றனர். தூக்குமேடையின்மீது சற்றுமுன்னரே கொல்லப்பட்ட தனது நண்பனொருவனுடைய தேகத்தினின்று கழுவானது அப்பொழுதுதான் எடுக்கப்பட்டுத் தனக்காகத் துடைக்கப்படுவதைக் கண்டான். அவனுடைய உடைகள் கழற்றப்பட்டன. ஒருகாலத்தில் அழகாயும் திடமாயுமிருந்த தன் தேகம் உருத்தெரியாமல் இளைத்துப்போனதைக் கண்டு லேய்லி திடுக்கிட்டான். இரண்டு கொலையாளிகள் அவனைக் கழுவிலேற்றக் கொண்டுசென்றனர்.

'மாணம் வரப்போகிறது. இதனுடன் எல்லாம் நாச மடைந்துவிடப் போகிறது! என்று நினைத்து லேய்லி இறுதிவரைக்கும் தான் மனம் தளர்வில்லாமல் ஆண்மகனாகவே யிருந்து உயிரைத் துறக்க வேண்டுமென்று செய்துகொண்ட பிரதிஞ்ஞையை மறந்து தேம்பித்ததும்பி மன்னிப்புக் கேட்கிறான். ஆனால் ஒருவரும் அவனுடைய முறையீட்டைச் செவி சாய்த்துக் கேட்கவில்லை.'

'சே! இவையெல்லாம் உண்மையாயிருத்தல் முடியாது. நான் தூங்கிக்கொண்டிருக்கிறேன். எல்லாம் கனவு' என்று நினைத்து விழித்துக்கொள்ள முயன்றான்.

'ஆனால் நான் லேய்லியல்லன், நான் அஸர்ஹாதன் தான்' என்று திடஞ்செய்துகொண்டு ஒருவாறு கண்விழித்துப்பார்க்கத் தான் லேய்லியுமன்றி அஸர்ஹாதனுமன்றி ஏதோ ஒரு மிருகமாயிருப்பதாகக் காண்கிறான். தான் ஒரு மிருகமா யிருப்பதைப்பற்றியும் இவ்விஷயம் இதுவரைக்கும் தனக்குத் தெரியாதிருந்ததைக் குறித்தும் அஸர்ஹாதன் அதிக வியப்புறுகிறான்.

செழிப்பான பள்ளத்தாக்குப் பசும்புற்றரையில் மேய்ந்துகொண்டு தனது நீண்டவாலால் ஈக்களை ஓட்டிக்கொண்டு இருப்பதாகத் தோன்றுகிறது. மடிகனத்திருப்பதாகத் தோன்றுகிறது. பக்கத்தில் ஒரு கழுதைக்குட்டி மிக்க களிப்புடன் துள்ளிக் குதித்துக்கொண் டிருக்கிறது. பின்னங்கால்களால் ஓர் உதை உதைத்து அக்கழுதைக்குட்டித் தன் தாயினிடம் (அஸர்ஹாதனிடம்) வந்து அதன் வயிற்றின் அடிப்பாகத்தில் இடித்திடித்துத் தடவிப்பார்த்து முலைக்காம்பு வாயில் அகப்பட்டவுடன் சாந்தமாய் ஊட்ட ஆரம்பிக்கிறது. அக் கழுதைக்குட்டியின் தாய்க்கழுதையாகத் தான் இருப்பதைக்கண்டும் யாதொரு ஆச்சரியமாவது வருத்தமாவது இல்லாமல் அஸர்ஹாதன் சந்தோஷமடைந்திருக்கிறான்.

தானும் தன் குட்டியும் சுகமாய் வாழ்ந்து சந்தோஷமுற்றிருப்பதை நினைத்து அஸர்ஹாதன் மனம் உவக்கின்றான். ஆனால் திடீரெனக் கீச்சென்றசப்தத்துடன் எதோ ஒன்று வந்து பக்கத்தில் தாக்கித்தைத்து அம்மிருகத்தினுடைய தோலிலும் தசையிலும் ஊடுருவியது. பொறுக்கமுடியாத நோவுடன் தாய்க்கழுதையாகிய அஸர்ஹாதன் தன் குட்டியின் வாயினின்று தன் மடியை இழுத்துக்கொண்டு முன்னே போய்க்கொண்டிருக்கும் மற்ற கழுதைகளுடன் சேர்ந்துகொள்ள ஓடியது. குட்டியும் அதனுடன் ஓட்டமாய் வந்துகொண்டிருந்தது. கழுதை கூட்டத்தினருகே வந்துகொண்டிருக்கும்போது மறுபடியும் இன்னொரு அம்புவந்து குட்டியின்கழுத்தில் பாய, குட்டியானது உடல் நடுங்கி உயிர் துடிக்கக் கீழே விழுந்தது. குட்டியை விட்டகல மனம் வராமல் அஸர்ஹாதன் ஆகும் அந்தத் தாய்க்கழுதை அங்கேயே நின்று விட்டது. குட்டிமறுபடியும் சிரமப்பட்டு எழுந்துநிற்கப்பார்த்து முடியாமல் கீழே விழுந்துவிட்டது.

பயங்கரமான இரண்டுகால் மிருகம் ஒன்று—ஒரு மனிதன்—ஓடிவந்து குட்டியின் கழுத்தை அறுத்தான்,

"சீ, இவையெல்லாம் வெறும் கனவே" என்று நினைத்து அஸர்ஹாதன் விழித்துக்கொள்ளப் பிரயத்தனப்படுகிறான்.

சிரமப்பட்டுக் கூச்சலிட்டுக்கொண்டே அஸர்ஹாதன் தொட்டியிலிருந்து தலையைத் தூக்கினான். அந்தப்பெரியார் செம்பிலிருந்த ஜலத்தை இன்னும் தன் தலையின்மீது கொட்டிக்கொண்டிருக்கக் கண்டான்.

" அப்பா, என்ன கஷ்டம்! ஓர் யுகமாயிருந்ததே" என்றான் அஸர்ஹாதன். அதைக்கேட்ட அப்பெரியார்" என்ன அப்படிச்சொல்கிறாயே! இப்போதுதான் தலையை அமிழ்த்தினாய்; உடனே வெளியிலெடுத்துவிட்டாய்; இந்தச்சிறு செம்பிலிருந்த ஜலமுழுவதும் இன்னும் கொட்டியாகவில்லையே; இப்போதாவது விஷயங்களை அறிந்துகொண்டாயா?" என்றார்.

அஸர்ஹாதன் விடையொன்றும் கூறாமல் அதிக பயத்துடன் அப்பெரியாரைப் பார்த்து நின்றான்.

"லேய்லியும் நீயே. நீ கொன்று போரிட்ட அந்தப் பல்லாயிர யுத்தவீரர்களும் நீயே. நீ விநோதார்த்தமாகக் கொன்று விருந்துண்ட அந்தமிருகங்களும் நீயே, என்னும் விஷயங்கள் உனக்கு இப்போது நன்றாய் விளங்கிற்றா? உனக்கு ஒருவனுக்குத்தான் பிராணன் உண்டு என்று நினைத்திருந்தனை; அந்த மோகத்தை உன்னிடமிருந்து விலக்கிவிட்டேன். மற்றவர்களுக்குத் தீங்கு இழைப்பதால் உனக்கே தான் தீங்கு இழைத்துக் கொள்கிறாயென்று அறிந்துகொண்டாயா?"

"ஜீவன் எல்லாரிடமும் ஒன்றேதான். அந்த ஒன்றான பரம்பொருளின் ஓர் அம்சமோ ஓர் பாகமோ உன்னிடம் பிரகாசிக்கிறது. உன்னிடமிருக்கும் இந்த ஒரு அம்சத்தின் மூலமாகத்தான் நீ உன் வாழ்வை அபிவிருத்தி செய்துகொள்ளவோ அல்லது தீங்கிழைத்துக்கொள்ளவோ அல்லது அதிகப்படுத்திக்கொள்ளவோ, குறைத்துக் கொள்ளவோ முடியும்.

"இதர ஜீவன்களை நேசித்து அவைகளும் நீயும் ஒன்றேயென உணர்ந்து உன்னுடைய வாழ்வுக்கும் இதே ஜீவன்களுக்கும் இடையிலுள்ளஎல்லைக்கற்களை இடித்துப் பொடித்தூளாக்கி நீ உன் ஜீவனை உயரிய நிலைக்குக்கொண்டுவரலாம்; உன் ஆத்மா அபிவிருத்தியடைய மார்க்கம் இதுதான்.

"ஜீவன் என்பது உன்னுடைய ஜீவன் ஒன்றையே குறிக்கிறது ;மற்ற ஜீவன்களை வதைத்து அவைகளைக் கெடுத்து உன் ஜீவனை மேன்மைப்படுத்திக்கொள்ளலாம்' என்று எண்ணுவதால் நீ உன் ஜீவனுக்குக் கெடுதியைத் தேடிக்கொள்கிறாய். அவ்வித எண்ணத்தால் நீ நாசமுறுகிறாய்.

" இதர ஜீவன்களை நசிக்கச்செய்வதென்பது உன்னால் சற்றும் இயலாத காரியம். நீ கொன்றுவிட்ட பிராணிகள் உன் திருஷ்டியைவிட்டு மறைந்தனவே யொழிய நாசமடைந்துவிட வில்லை. நீ இதரர்களுடைய வாழ்க்கையை நாசஞ்செய்து உன்னுடைய வாழ்க்கையை அதிகரித்துக்கொள்ளலா மென்று நினைத்தனை. ஜீவனுக்குக் காலம் இடம் என்பது ஒன்றும் இல்லை. ஒரு க்ஷணகால வாழ்க்கையும், ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வாழ்க்கையும், கண்ணுக்குத் தென்படும் பிராணிகளின் வாழ்க்கையும், கண்ணுக்குத் தென்படாதவற்றின் வாழ்க்கையும் யாவும் சமமே. ஜீவன் ஒன்றுதான். நிச்சயம் ; அதை நாசஞ் செய்யவோ மாற்றவோ முடியாது. மற்றவை யாவும் வெறும் தோற்றமே" இம்மொழிகளைக் கூறிவிட்டு வயோதிசர் மறைந்துவிட்டார்.

மறுநாள் காலையில் அஸர்ஹாதன் லேய்லியையும் மற்றக் கைதிகளையும் விடுதலை செய்துவிடும்படி கட்டளையிட்டான்.

அடுத்தநாள் தன் மகன் அஷீர்பாதிபாலனைக் கூப்பிட்டு அஸர்ஹாதன் ராஜ்யத்தை அவன்வசம் ஒப்புவித்துவிட்டுத் தான் அறிந்துகொண்ட உண்மைகளைப்பற்றி ஆராயும்பொருட்டு அரணியம்சென்றான். பிற்காலத்தில் அவன் பாதசாரியாக ஊர்ஊராய்ச் சென்று"எல்லாப்பிராணிகளிடத்தும் ஆத்மாஒன்றே. மனிதர்கள் இதர உயிர்களுக்குக் கெடுதி உன்னுங்கால் தங்களையேதான் கெடுத்துக்கொள்கிறார்கள்" என்று உபதேசித்து வந்தான்.

வில்லி பாரத விளக்கம்

சபா பருவம்.

(790 வது பக்கத் தொடர்ச்சி)

இராசசூயச் சருக்கம்

பூபால ரவையத்து முற்பூசை
　　பெறுவார்பு றங்கானில்வாழ்
கோபால ரோவென்று ருத்தங்க
　　திர்த்துக்கொ தித்தோதினன்
காபாலி முனியாத வெங்காம
　　னிகரான கவினெய்தியேழ்
தீபால டங்காத புகழ்வீர
　　கயமன்ன சிசுபாலனே.

[நிலமன்னர் கூடிய சபையில் முதற்பூசையாகிய அக்கிரபூசையைப் பெறுபவர் முல்லைநிலத்தில் வாழ்கின்ற இடையர்களோ? என்று கோபித்துக் கூச்சலிட்டு மனங்கொதித்துச் சொன்னான். சிவனால் கோபித்து எரிக்கப்படாத, விரும்பப்படுகிற மன்மதனுக்கொப்பான அழகைப்பெற்று, எழுதீவுகளிலும்அடங்காமல் அப்புறம் கிளம்புகின்ற புகழையுடைய யானையைப்போன்ற சிசுபாலன்]

ஈன்றபோதி லன்னை பெரிது மகிழாத மகனாய், நான்கு கைகளும் மூன்று கண்களுமுடைய வமங்கலவுருவங் கொண்டிருந்த சிசுபாலனைக் கண்ணனெடுத்தவளவில், யாவரும் விரும்புமொரு வடிவுடையனாயவன் மாறி நின்றான். தனதொப்பற்ற வெழிலிற்குக் காரணனாயவக் கண்ணனையே யெதிர்த்துக் கனன்று, வசைமொழி கூறியிகழ்ந்த சிசுபால னிகழ்ச்சிக் குரியா னல்லனோ ? உருவிலியெனப் பெயர்போந்த அனங்க னவற் கெவ்வாற்றானு முவமை கூறுந் தரத்த னல்ல னென்பது மூன்றாமடியாற் போதரும். உருவிழக்காத வோர் மன்மதன், உலகத்திற் காணாத வோர் மாரன் எவ்வடிவினனா யிருப்பனோ வத்தகைய பொற்பு வாய்ந்தவனென இல்பொரு ளுவமையா லவனது வனப்புக்கூறப்பட்டது. அன்றிச்சிவபிரான் முனிவதற்குமுன் கொண்டிருந்த சாயல்சிரம்பிய மன்மதன் போன்ற சிசுபாலனென்று சிறப்பித்துக் கூறியது மாகும். இயற்கையழகு வாய்க்கப்பெறாமற் கண்ணனாலாய வழகே கொண்டவனென்பது 'எய்தி' என்னு மொழியாற் பெறப்பட்டது. தன்னைப் போன்ற வைந்து திருமுக முடையவனாய பிரமனது தலையைக் கிள்ளிக் கபாலமாய மண்டையோட்டை யேந்திய காபாலி, தன்னைப் போன்றே நெற்றிக் கண்ணுடையனாய்த் தோன்றிய சிசுபாலனைக் கோபியா தொழிந்தாலவ னுயிர்பெற் றிருந்தனன். உலகிற் றீவுகளேழெனப்பகுத்துரைத்தலின், உலகினடங்காது மீறிப்பரந்த புகழையுடைய மன்னனாவான் சிசுபாலன். வீரகஜம் போன்ற விறல் மன்னன், வேழமென வெம்பி, மதங்கொண்டு தன் பாகனையழிக்கும் பகடேபோல், தனது மாமன் மகனும், தனக் குதவிபுரிந்து அணங்கமைத்துத் தந்தவனுமாய கண்ணனையே சீறிச்சென்றான். ஆனது கொண்டவன் கயமன்னனாயிருந்தும் கயம் அன்னனாய்க் கயவனேயாயினன். வீரம்நிரம்பிய மன்னர் நெருங்கிய அவையில், அரசகுலத்தவ னல்லாத இடையர் குலத்தைச்சேர்ந்த வொருவனுக்கு அக்கிர பூசைக்குரிய வுபசாரத்தைச்செய்த லடாதென் றியம்பினன் சிசுபாலன். பூமியைப் பரிபாலிப்பவர்க்கும் முந்தியோ வைப்பது கோவைப் பரிபாலிப்பவனை ? அரசகுலத்தைச்சேர்ந்த வசுதேவன் புதல்வனாயிற்றே யெனிற் புறங்கானில் வாழ்தலாலவன் நாட்டுக்குப் புறத்திலுள்ளவனாய், நாட்டுப்புறத்தானெனும் நாகரிகத்திற் குறைபா டுற்றவனன்றோ ? அவனுக்கு முதற் பூசை யளித்த லெவ்வா றேற்கும்?

கோபாலரோவென்னு மிடத்துள்ள 'ஓ'காரத்தின் குறிப்பு உணரத்தக்கது. அது எதிர்மறையைமட்டுங் காட்டி நிற்காமல், இகழ்ச்சிக்குறிப்போடுமமையாமல், உயர்ந்த வறிவொழுக்கங்களா லடங்கியபெரியோர்

நீங்கிய வேளேயோர் வழங்கும் சொல்லேயும் நடையை
யும் தெரிவித்து நிற்கிறது. கற்றுணர்ந் தடங்காது,
மாக்கள்தன்மை மாருது நிற்கும் சில மானிடர்கள்
ஒருவர்க்கொருவர் முனிந்து வார்த்தையாடுங்காலத்து
இவ்வாறு 'செல்லையோ வெல்லையோ' என்று
குரோத மூளப் பேசுவதை நாமனைவரும் கேட்டுள்
ளோம். சிசுபாலனும் முரட்டுத்தன்மை பொருந்தி,
பணிவுமமைதியு நீங்கியவ ஞதலா லவ்வாறே ஓகாரத்
தோடு வினவலுற்ருன்.

காடுசென்ற இராமரைக்கண்டு பணிந்து, 'ஐய,இம்
முனிவாற்றி யெங்காடு வந்தடை யினென்றிரக்கும்
பொருட் டாறுகொண்டு கங்கைக்கரையை யடைந்த
புண்ணியனேக் கண்ட குகன், இவ னஞ்சனவண்ணனே
யென்ஞருயிர் நாயகனேக் காட்டிற் செலுத்தியதோட
மையாமல், கானகத்திலுங்கண்டு கொல்லவெண்ணித்
தம்பியுமாவும் புடைசூழ்ந்த சேனேயோடு பெயர்ந்
தனனென்று அழுன்றுசொன்ன சொற்களேயிங் கெ
டுத்துக் காட்டுவோம். குகன் நற்குணம் பொருந்தி
நன்னடக்கை யுடையவனுயிருந்தும், கல்வி யறிவினற்
சாந்த முதலிய வெய்தப் பெருமையால் அவன் வன்
சொல்லுடையனுப் நயம்படவுரைக்குந் தன்மை யில்
லனு யிருந்ததைக் கம்பர் ஓகாரங்களேப் பொருத்தியே
தெரிவிக்கிருர். அச்செய்யுள்களி லொன்று வரு
மாறு:—

ஆழநெ டுந்திரை யாறிக டந்திவர் போவாரோ
வேழநெ டும்படை கண்டுவி லங்கிடும் வில்லாளோ
தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல் [லன்றோ
வேழமை வேடனி றந்தில னென்றெனே யேசாரோ?

[ஆழமான நீண்ட அலேகளேயுடைய கடல்போன்ற கங்
கையைக் கடந்திவர்கள்போய் விடுவார்களோ' யானே முத
லிய பெரும்படைகளேக்கண்டு ஒளிக்கும் வில்லாளியோ
நான்? நீ யென்தோழனென்று இராமர் சொன்னசொல்
ஒரு ஒப்பற்ற சொல்லல்லவோ? அதை நான் மறக்கக் கட
வேனே? அவ்வாறு நான் பரதனே யெதிர்த்துப் போர்புரி
யாமல் விட்டுவிடுவேனுனல் உலகத்துஉள்ளவர்கள் என்னே
உதவியற்ற வேடனிவன் இன்னும் சாகாமற் கிடக்கின்ரு
னே யென்று பரிகாசம் செய்யமாட்டார்களோ]

"வஞ்சனேயா லரசை யடைந்தமன்னரும் வந்தாரே,
இவருய்ந்துபோய்விடில் நாய்க்குகனென் றென்னே
யேசாரோ" வென்று முற்செய்யுளில் கூறியதையும்,
இச்செய்யுளேயு முற்றுநோக்கில் நம்முன்னர்க் குகன்
நின்று, அழுத்தமான குரலுடன் பேசுவதுபோற்
ருேன்றும்.

வில்லிபுத்தூரார் செய்யுளினமைப்பு மிங்கு நோக்கத்
தக்கது. நான்குசீர்கள் காய்ச்சீர்களாயு மைந்தாஞ்சீர்
பெரும்பாலுங்கனிச்சீராயும் அமைந்துஅட்டமுடைய
தாய் நிற்கும் கலிவிருத்துறைகள் ஓதுவதற் கோரினி
மையைத் தந்து மனதிற் கிளர்ச்சியை யுண்டுபண்ணு
கின்றன.

சூரன்கு லத்தோர்கு பேரன்கு
லத்தோர்சு டர்ப்பாவகப்
பேரன்கு லத்தோர்கண் முதலோரி
ருந்தார்கள் பெயர்பெற்றபேர்
வீரங்கொ லோவாகு சாரங்கொ
லோசெல்வ மிச்சங்கொலோ
பூரம்பு ராசிப்பு விக்கென்று
முதுவோர்கள் பொதுவோர்கொலோ

[சூரியகுலத் தரசர்களும், சந்திரகுலத் தரசர்களும், வன்
னிய குலத்தரசர்களுமாக அநேக பெயர்பெற்ற அரசர்கள்
இருக்க, வீரத்தைக்கொண்டோ, தோள்வலிபற்றியோ,
பணமிக்கதாலோ கிருஷ்ணனுக்குப் பூசை செய்வது!
மேலும் நிறைந்த கடல்சூழ்ந்த பூமிக்குளக்காலத்தும் பெரி
யவர்கள் இடைக்குலத்தவர்களோ]

சூராய சூரியகுலத்தவரும், அறிவால்மிக்க மதிகுலத்
தவரும், வீரம்மிக்க வன்னிகுலத்தவரு மிருக்க, ஏது
மிலா இடைக்குலத்தவனே எதுகொண்டு முதன்
மைப்பட வைப்பது? வீரத்தால் மிக்கவ னென்பீரோ
வென்னி லன்று பகைவர்க்கஞ்சி மதுரைவிட்டுத்
துவரைக்குபுகுந்த வீரனிவன். தோள்வலி பெற்றவ
னென் றுரைப்பீராகில் சராசந்தனே மல்லயுத்தத்தில்
வெல்லமுடியாது வீமனேத் தூண்டி யவனேக்கொண்டு,
குன்றுகொண் டமைந்த தோளானே வென்ற இழி
தகையனிவன். செல்வமிகுந்தவனென்று செப்புவீரா
கில் அவன் ஆநிரை நீக்கும் சாணகச் செல்வமே கைந்
நிறைந்த செல்வமா யுள்ளவன். பெயர்பெற்றபேர்
நிறைந்திருக்க ஓர்தாய் வயிற்றிற் பிறந்து வேருேர்
தாயிடம் வளர்ந்து தந்தையிவனென வாய்ந்தறிய
வியலாத பெயரிலா ஊரிலாப் போதக யூதபமெனத்
தருக்கித் திரியும் இவனே வரசசபையில் முதன்மை
பெற்றவன்?

கடல்சூழ்ந்தவையகத்திற்குக் கடல்சூழ்ந்த தீவிலொ
ளித்தவனே, சிற்றிடம்புகலாகக் கொண்டவனே, பகைவ
ரெதிர்ப்பின் மரக்கலமேறிக் கடலிற்செல்லும் எண்
ணங் கொண்டவனே, நிலவுலகில் முதன்மையாக
வைத்த தொக்குமே யொக்கும்! அரசராயின்றியும்,
வேறு தொழிலுடை வகுப்பிற் சேர்ந்தவனு யின்றியும்
பொதுமகனு யிருப்பவனே, அரசர் முனிவர் முதலி
யோரைத் தெரிந்தெடுப்பி ஞெருவர்க்கொருவர்
பொருமை கொள்ளுவரென்னு மெண்ணத்தாற் றெரிந்
தெடுத்ததுபோலும்.

'பேரன்குலத் தோரிருந்தீர்கண் முடிமன்னர்
பெயர்பெற்றபேர்'

என்னும் பாடத்திற்கு, அநேக முடிமன்னரிருந்தும்
முடிசூடும் பேறிலாது வசுதேவன் வம்சத்தைவிட்டு
நீங்கி நந்தகோபன் மகனுய் வளர்ந்தானே முதற்பூசைக்
குரியனுய்ச் சொன்னசொல் நந்துமென்றுரைத்தனன்
சிசுபாலன்.

கம்ப ராமாயணம்

பாலகாண்டம்

18. எதிர்கொள் படலம்

அகப்பை யோன்றுங் கம்பர்கை கண்டிலம்.

சூடியின் நறவெலாஞ் சமைந்துட னுண்டபின்,
ஊடியுங் கூடியு முயிரனா் மயலுறப் பீடுடை
மாதரார் உய்த்தவவ் விரவுதான் நீடு
795 பக்கத் தொடர்ச்சி.
மோர் நெறியிலா தங்ஙனே முடி
வுறப் படர்திரைக்கருங்கடற் பரமன்
மார்பிடைச் சுடர்மணிக் கரசென

விரவி தோன்றினன். தயரதன் பரிவாரத்தினர்
மேலேக்கிப் புறப்பட்டனர். புறப்பட்டு,

அடாநெறி யறிதல் செல்லா
வருமறை யறைந்த நீதி
விடாநெறிப் புலமைச் செங்கோல்
வெண்குடை வேந்தர் வேந்தன்
படாமுக மலேயிற் றேன்றிப்
பருவமொத் தருவி பல்கும்
கடாநிறை யாறு பாயுங்
கடலொடுங் கங்கை சேர்ந்தான்.

[தகாதவொழுக்கம் இன்னதென்று தெரிந்துகூட இல்
லாதவனும், அரிய மறைகள்கூறுகின்ற நீதிகளே விடாத
ஒழுக்கமுடையவனும், புலமை மிகுந்தவனும், செங்கோலும்
வெண்குடையும் உடையவனும் ஆய தயாதசக்ரவர்த்தி,
சித்திரச் சீலேயணிந்த முகத்தையுடைய யானேகளாகிய
மலேயில் தோன்றிக் கார்காலத்தை யொத்து அருவிகள்
போல் பெருகுகின்ற மதசலம்நிறைந்த ஆறுகள் பாயப்
பெற்ற தன் சேனேயாகியவோர் கடலோடு கங்காநதியை
அடைந்தான்]

விண்ணுறு நதியை மண்மிசைக் கொணர்ந்து கட
லொடு சேர்த்தான் பகிரதன் என்னின், அவன் வழித்
தோன்றலாம் தயாதன் அதற்கெதிர் ஓர்கடலேக்கொண
ர்ந்தக் கங்கையிற் சேர்த்தவனுனன். இரவிதன் குலத்
தோர் இவ்வண்ணம் இருதிறத்திலும் ஆற்றவல்லுநர்.

இவ்வகையிற் கங்கையைச் சேர்ந்த சேனே அந்நதி
யின்நீ ரவ்வளவும் முகந்து மாந்திவிட்டதால் கடலிற்
போய்க் கலப்பதற்கு யாதும் நீர் அது அற்றதாகவே,
உப்புத் தின்றிருக்கு முததி தனது தாகத்தைத்
தணித்துக்கொள்ளத் தெண்ணீர் பெருததாகி வேட்
கையுற் றுழன்றது. ஆண்டுநின்றெழுந்து அயோத்தி
வேந்தன் தன் அநிகத்தோடும் மிதிலேயின் பாங்கர்
எய்தினன். எய்துதலும், திருமகளே அளித்த பாற்
கடல் மற்றக்கடல்களே எதிர்சென் றழைத்துவர
எழுந்ததேபோல், சனகன் தன் படைசூழ எழுந்து,
தயரதனேக்காணுமோர் அவாவினுல் முந்துறும் தன்
மனமென விரைவுடைத் தேரின் ஏகினன்.

எதிர்கொள்வா னேகுமிப் படையின்பெருமை
யைச் சிலபாசுரங்களால் கூறுகின்ற கம்பர்,

மன்னெடுங் குடைமிடைந் தடையவான் மறைதரத்
துன்னிடுந் நிழல்வழங் கிருள்துரப் பெளிதரோ
பொன்னிடும் புவியிடும் புனேமணிக் கலனெலாம்
மின்னிடும் வில்லிடும் வெயிலிடும் நிலவிடும்

[மன்னர்களது குடைகள் நெருங்கிச்சேர அதனுல்
ஆகாயம் முழுவதும் மறைந்துவிடவே, அங்குச் சூழ்ந்த
நிழல் விளேக்கின்ற இருளே விலக்குதல் எளிதாமோ! எனி
னும், அச்சேனே போகும்வழியில் பூமியில் போட்டுவிடும்
பொன்னில் பதித்துள்ள அழகிய இரத்தின ஆபரணங்க
ளெல்லாம் மின்னலேப்போல் ஒளிவீசும் சில, விண்மீன்
போல் விட்டுவிட்டு ஒளிரும் சில, சூரியனேப்போல் நின்று
ஒளிதரும் சில, சந்திரன்போல் பிரகாசிக்கும் சில]

என்று மேலிருந்து கீழ்வரும் ஒளிவகைகள் மறைந்த
தேனும் அவைகட்கிணையாய்க் கீழ்நின்று மேல்பா
யும்படி ஒளிபுகும் விந்தையைக் காட்டுகின்ருர்.

அங்கோ ரகப்பை இங்கோ ரகப்பை கொண்டுகூட்
டித் தன்கவி தொகுத்துளார் கம்பரென்று செப்புவார்
சிலர். அன்னவர்க்கு ஈண்டோர் அமயம் தருவது
போல் சூளாமணியில்,

கொடியொடு குடையிடை மிடைவன விருள்செய
முடியொடு சுடர்குழை முளேவெயி லொளிசெய
அடியொடு புனேகழ லரசிறை படையெழ
இடையிடை யிரவொடு பகலிசை வனவே.

[கொடியும் குடைகளும் நெருங்கிச் சேர்வனவாகி
இருளே உண்டாக்கவும், கிரீடங்களிலிருந்தும் பிரகாசம்
பொருந்திய குண்டலங்களிலிருந்தும் வீசும் ஒளிகள்
வெளிச்சத்தைத் தரவும், கால்களில் அணிந்த கழல்களே
யுடைய அரசர்பெருமான் சைனியம் எழுந்ததால், அடுத்து
அடுத்து இரவும் பகலும் அங்குப் பொருந்தின ஆயின]

என்றொரு செய்யுள் இருக்கின்றது. ஒருகால், அச்
செய்யுளின் நினேவினுல் கம்பருக்கு இந்தப்பாசுரம்
அமைந்திருக்கலா மெனினும், சிறிது ஊன்றிநோக்கி
ஞல் இதனே அகப்பையால் மொண்டு கம்பர் தன்
நூலுள் பெய்துகொண்டிலர் என்பது தெளிவாம்.
குடையின் நிழலும், முடியொடு குழைகளின் வெயி
லும் ஒருங்கே யிருந்ததால், இரவும் பகலும் பக்கம்
பக்கமாய் அமைந்திருந்தனவென்றோர் அதிசயங்காட்
டினர் தோலாமொழித் தேவர். இல்பொருள் ஒன்று
உவமையாதற் கிலக்கணமுளது ; இயலாப் பொருள்
ஆவ தெங்ஙனம்? குடையால்வரும் நிழலேத் துரத்து
வது குழையுமிழ் வெயில். ஆதலின் அரசரின்றிக்
குடைகள் மாத்திரம் ஒருபுறம் மிடைவதும், குடை
களின்றி மறுபுறம் அரசர்மாத்திரம் மிடைவதும்
நேர்ந்தாற்ருன் இரவும் பகலும் இடையிடை இசை
வன ஆதற்கூடும். இதுகருதிக் கம்பர், இரவும் பகலும்
இசைந்த வென்னுமல் குடைமிடைந் திருள்விளேந்த
தெனின் அதனேப் போக்கப் பகலொளியாய வெயி
லும், இரவொளிகளாகிய மின்னல் வில் நிலவுகளும்
தோன்றினவென இருபொழுதும் ஒளிசெயும் சுடர்
கள்யாவும் சேர்ந்ததோர் பெற்றியைச் செப்பினர்
போலும். ஒருயிற்கு ஈரெமன் என்ன இவ்விருளே
விலக்குவதற்குக் கதிரவனும், மின்னலொடும் தாரகை
களொடும் மதியமும், கம்பர் பாசுரத்தில் அணிகலங்
களாகத் தோன்றலாயின. இன்னவாறு, தாரதலத்தி
லுள்ள தமிழ்க்குற்றங்களே யெல்லாம் அராவும் அரம்
கம்பநாட்டாழ்வார்கவி ஆயிற்றென்பதற்கு இதனே
உதாரண மாக்குதற்கு இசையோமெனினும், கம்பர்
கைக்கொண்ட கருவி அகப்பை யன்றென்பதை இது
புலப்படுத்தும். மற்றவர் வரைந்துள சித்திரங்களேத்

தன்னுடைய வர்ணங்களால் அங்குமிங்கும் சிறிது செம்மைசெய்யும் தூரிகையே இப்புலவர்பெருமான் கரங்களிற் பொலிவுறவமைந் திலங்குகின்றது.

இவ்வகைத் தயரதனை எதிர்கொள்வான் எய்தினன் ஜனகன்.

எய்தவத் திருநெடுந் தேரிழிந் தினையதன்
மொய்கொடிஞ் சேனைபின் னிற்கமுன் சேறலும்
கையின்வந் தேறெனக் கடிதின்வந் தேறினன்
ஐயனும் முகமலர்ந் தகமுறத் தழுவினன்.

தழுவினின் றவனிருங் கிளையையுந் தமரையும்
வழுவில்சிந் தனையினன் வரிசையி னளவளாய்
எழுகமுந் துறவெனு வினிதுவந் தெய்தினன்
உழுவைமுந் தரியனு னெவரினும் முயரியான்.

[வந்து, தன் அழகியபெரிய தேரிலிருந்து இறங்கி, தன் வலியமைந்த திண்ணிய சேனை பின்னிற்க முன்னே சென்றவனவில், கைகொடுத்து வந்து ஏறு என அழைக்க விரைவில் வந்து ஏறினன் ஐயனும் முகமலர்ந்து மார்புறத்தழுவினன்.........அவ்வாறு தழுவிநின்றவன் கிளைஞர்முதலாயவர்களது க்ஷேமத்தைக் குற்றமற்ற சிந்தையால் முறைப்படி வினவி அளவளாவி, 'முன்னே எழுக' என்ன, புலிக்கு முன் செல்லும் சிங்கத்தையொத்தவனும் எவருக்கும் உயர்ந்தவனும் ஆனவன் இனிது உவந்து எய்தினன்]

இவ்விரு பாசுரங்களிலும் குறித்த நிகழ்ச்சி இவ்வகைத்தெனத் தெள்ளிதின் புலப்படல் அருமையாயிருக்கின்றது. பெரும்பாலும் வினைமுதல் தோன்றுமவிருத்தலால் யார்தேரில் யார் ஏறினரென்பதும், அளவளாவியவர் எவரென்பதும், முந்துற எழுகவென் றியம்பியவர் எவரென்பதும், இருவரும் ஒரு தேரிலோ வேறுவேறு தேரிலோ சென்றனரென்பதும் விளங்காவண்ணம் இவ் வியங்குசித்திரம் மயங்கவேண்டுமென நினைத்த கவியின் கருத்து யாவதாகுமோ! கைகொடுத் தேற்றியது யாவரேயாயினும் அதுவொரு பொருளன்று. முன், கலைக்கோட்டுமா முனிவர் தன்நகர் எழுந்தருள வேண்டுதல்பொருட்டு அன்னுன் மாதுலன் ரோமபதன்நகர்க்குத் தயரதன் எய்தியநாள் இருவேந்தரும் சந்திக்க, காலில் வீழ்ந்ததுகூட எவரென்று வெளிப்படையாய்க் காட்டாது,

எதிர்கொள்வான் வருகின்ற வயவேந்தன்
றனைக்கண்ணுற் றெழிலி நாண
அதிர்கின்ற பொலந்தேர்நின் றரசர்பிரான்
இழிந்துழிச்சென் றடியின் வீழ
முதிர்கின்ற பெருங்காத றழைத்தோங்க
வெடுத்திறுக முயங்க லோடும்
கதிர்கொண்ட சுடர்வேலான் றனைநோக்கி
யிவையுரைத்தான் களிப்பின் மிக்கான்

[எதிர்கொள்ள வருகின்ற வெற்றிபொருந்திய வேந்தனைக்கண்டு, மேகமும் நாணும்படி ஒலிக்கின்ற பொன் தேரிலிருந்து சக்ரவர்த்தி இறங்கியபோது சென்று அடியில் வீழ, முதிர்கின்ற பெரிய காதல் தழைத்து ஓங்க எடுத்தணைக்கவும், ஒளிபொருந்திய வேலாயுதத்தை யுடையவனை நோக்கிக் களிப்பில் மிக்கவன் பின்வருமாறு உரைத்தான்] என்றவளவில் விட்டுவிட்டார் கம்பர். சக்ரவர்த்தியின் பாதங்களைப் பணிதலே முறைமையாகு மாதலால் அது அங்குச்செய்தது உரோமபதனே யாதல் வேண்டு மென்பதற் கையமில்லை எனினும் சந்தித்த வேந்தர் செயலைச் சிறிதேனும் மருள்பட வுரைக்குங் கொள்கை கொண்டுளர்போலுங் கம்பர்.

இன்னவர் றிருவரு மினியவா றேகவத்
தன்னுமா நகரின்றெதிர்வரத் தன்னினன்
தன்னையே யனையவன் றழலையே யனையவன்
பொன்னின்வார் சிலையிறப் புயநிமிர்த் தருளினன்.

[இவ்விதம் தயரதனும் இனிதின் செல்ல, தனக்குத் தானே நிகரானவனும், நெருப்பின் நிறமுடைய சிவபிரானது பொன்மயமான நீண்ட வில் ஒடியும்படி புயங்களை நிமிர்த்தினவனுமான இராமன், தந்தையை எதிர்கொண்டழைக்க அந்த நெருங்கிய மிதிலையிலிருந்து எழுந்து வரலாயினன்.]

முன் ஜனகனும் தயாதனும் செய்கையில் மயங்கினரெனின் இங்குத் தன்னையே யனையவனும் தழலையே அனையவனும் தம்முள் தலைமயங்குகின்றனர். இராமன் தன்னையே அனையவனும், சிவன் தழலையே அனையவனும் ஆவதனிலும், தன்னையே அனையவன் என்பதுதழலையே அனையவனுக்கு அடைமொழியாயினும் ஆகலாம். அல்லது, தன்னையேயனைய வன்தழலையே அனையவன் (இராமனையே அனைய அந்தத் தழல் நிறமுடைய கடவுள்) எனப் பிரித்துச் சிவவிஷ்ணு வேற்றுமை யின்மையைச் சாதிப்பதாயினும் ஒக்கும்.

முன் மன்னன் இன்னுயிர் வழிக்கொண்டாலென விச்வாமித்திரனுடன் சென்ற மைந்தன் இன்று அவ்வாவி மீண்டுவந்ததென்னத் தந்தைமாட் டணுகிப் பணிதலும், தயரதனவனைத் தழுவுங்கால்,

மனுவெனுந் தகையன்மார் பிடைமறைந் தனமலைத்
தனிநெடுஞ் சிலையிறத் தவழ்தடங் கிரிகளே.

[மனுவனைய பெருமையுடைய தயாதன் மார்பினிடை, மலைபோன்ற ஒப்பற்ற பெரிய வில் முறியும்படி நிமிர்ந்த இராமனது பெரிய தோள்களாகிய மலைகள் மறைந்தன]

பின் பிரிந்தயாவரும் ஒருவரோடொருவர் அளவளாவிக் கலந்தனர். தாயரைப் பணிந்தனர் இராமனும் இலக்குமணனும். தந்தை தன்னைத் தழுவியதேபோல் இராமனும் தனைப்பணிந்த பரதனைத் தழுவியெடுத்தணைத்துக்கொண்டனன். சத்துருக்கனும் தன் மூத்தோர் கழல்களை அணிந்தனன், இன்னபடி,

கோல்வருஞ் செம்மையுங் குடைவருந் தண்மையும்
சால்வருஞ் செல்வமென் றுணர்பெருந் தாதைதன்
மேல்வருந் தன்மையால் மிகவிளங் கினர்கள்தாம்
நால்வரும் பொருவினன் மறையெனும் நடையினர்.

[முரணில்லாது நடக்கும் நான்கு வேதங்களைப்போன்ற ஒழுக்கமுடைய அந்நான்கு குமரரும், செங்கோல் கோடா நீதியும், தண்குடை அளிக்கும் கருணையுமே, சிறந்த செல்வங்களென்று உணர்ந்த தம் தந்தையின் மேன்மைபொருந்திய குணங்களால் மிகவும் விளங்கினர்.]

உழவர்தம் படைச்சாலிலிருந்து அவர் அடைந்துள செல்வமே மன்னனது நீதியும் கருணையும் வழுவாப் பெருமைக்குக் காரணமாயிற்றென்று, 'குடியுயரக் கோனுயரும்' என்னும் கொள்கையைக் கம்பர் இவ்விடங் குறித்தனரெனினும் இவையும். தநயரும் மறைபனர், தந்தையும் சான்றவன் என்னின் இன்னவர் பெருமை இயம்பற்பாலதோ!

அதன்மேல்,

சான்றெனத் தகையசெங் கோலினு னுயிர்கள்தாம்
ஈன்றநற் றாயெனக் கருதுபே ரருளினன்
ஆன்றவிச் செல்வமித் தனையுமொய்த் தருகுறத்
தோன்றலைக் கொண்டுமுற் செல்கெனச் சொல்லினன்

[தருமத்தின் சாக்ஷிபோன்ற செங்கோலுடையவனும், உயிர்களையெல்லாம்பெற்ற தாய் என்று கருதும் பெரிய அருளுடையவனுமாகிய தயாதன் "நிறைந்த இந்தச்செல்வமெல்லாம் சூழ்ந்துவர என் மைந்தனை முன் அழைத்துச் செல்லுங்கள்" என்று கூறினன்.]

அவ்வாறே இராமனை உலாக்கொண் டேகினர்.

ஏமாங்கதத் திளவரசன்.

T. N. சேஷாசலம் B. A., B. L. இயற்றியது.

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற் கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதைமையும், புன்கவி புகுந்து செய்யுந் துன்மதிச் சூழ்ச்சியும் பொருந்திக் கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஒருதனிச் சுவையுள தென்பதை இந்நூலினுற் காணலாம். சம்பாஷணைத் திறமும், சொல்நயச், சுவையும், கருத்தைக் கவர்கின்ற கதை யமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்த இந்நாவல்நூல் ஆங்கிலத்தில் ஸர் வால்டர் ஸ்காட் அனைய சிறந்த நாவலாசிரியர்களது நூல்களுக்கு இணையாகத்திகழ்கின்றது.

விலை ரூ. 1–0–0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

கம்பராமாயணம்.

பால காண்டம்.

T. N. சேஷாசலம் B. A., B. L—பதிப்பு.

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில், புதிய முறையில் பொருள்விளக்கிப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்கு நேரே பதவுரை எழுதிவிட்டால், படிப்பவர் தம் முயற்சியால் பொருளை ஆய்ந்துகொள்ளும் பழக்கம் பெற இயலாது போய்விடும். ஆதலால் இப்பதிப்பாசிரியர், பதம் பிரித்தும் தொகைநிலைத் தொடர்களை விரித்தும் அன்வயப் படுத்தியும் அவாய்நிலைகளை வருவித்தும் கவியின் வார்த்தைகளைக் கொண்டே செய்யுளின் பொருளை விளக்குகின்றார். அரும்பத உரையும் விசேஷக் குறிப்புகளும் அங்கங்குச் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்குக் காட்டியுள்ள பொருள்கள் புதியன. கவியின் ஹிருதயத்தைத் தழுவியவை.

விலை ரூ. 3–0–0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A., B.L. அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய "Murugan, The Tiller" என்னும் சிறந்தநூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி தமிழிற்செய்த மொழிபெயர்ப்பு. தற்கால நாகரீகத்தின் கொடுமைகளுக்கெல்லாம் காரணம் வாழ்க்கையின் அருமையான தத்துவங்களை மறந்திருத்தலே என்னும் கொள்கை இந்நூலின் கதையோடு மிகவும் அழகாக இழைந்து நடக்கின்றது.

இவ்வகை நாவலை ஆங்கிலத்தில் Domestic Novel என்பார். உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின்செல்பவர் நிலையின் தாழ்மையும் இந்நூலின்கண் செவ்வனே எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

விலை ரூ. 1-8-0 வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:— 11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

திருக்குறள்

மூலமும் சொற்குறிப்பு அகராதியும்
விஷய ஒப்புக்குறளும்.

வா. மார்க்கசகாயம் செட்டியாரவர்கள்—பதிப்பு.

சிற்றடக்கமாய்ச் சட்டைப்பையில் கொண்டு செல்லத்தக்கப் பதிப்பு. இப்பதிப்பில் அட்டவணை மாத்திரம் முன்னூறு பக்கங்களுக்குமேல் அளிக்கப் பெற்றிருக்கின்றது. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புகின்றவர்களுக்கு இவ்வட்டவணைகளின் அமைப்பு மிகவும் உபயோகமாயிருக்கும். இவ்வட்டவணையின் உதவிகொண்டு நூலைப்பயிலும் பயில அதன் நயம் மேன்மேலும் விளங்கலாகும். இதன் அருமையைப் பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை ரூ. 0–12–0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

பருந்தும் நிழலும்.

A. பாலகிருஷ்ணன் M. A. B. L. இயற்றியது.

டிக்வன்ஸி, எமர்ஸன், லாண்டார், ரஸ்கின் போன்ற பல ஆங்கில ஆசிரியர்களின் பிரபலமான கட்டுரைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு அடங்கிய நூல். அவ்வக் கட்டுரைகளுக்குத் தோற்றுவாய் விளக்கம் முதலியனவும் அருமையாய் எழுதியிருக்கின்றார்.

விலை ரூ. 1-0-0. தபால் செலவு வேறு.

மானேஜர், கலா நிலயம்.

11. வேளாளர் தெரு, புரசை, சென்னை.

நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷூயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமாயிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்து கொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி

மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர், பிராட்வே, சென்னை.

குலசேகராழ்வார்

திருவாய் மலர்ந்தருளிய

பெருமாள் திருமொழி

மூலமும்

பு. ப. இரத்தினசபாபதி நாயகர், அவர்கள் இயற்றிய பதவுரை, விசேடவுரை, இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விரித்தியுரையும்.

நாலாயிரப் பிரபந்தத்தின்கண் தேர்ந்த பயிற்சி இருப்போர்க்கும் அதனைப் பயில முயல்வோர்க்கும் ஆகிய இருதிறத்தோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்க வல்லது.

விலை, காலிகோ கட்டடம் ரூபா 1 4 0

„ சாதாரண கட்டடம் „ 1 0 0

வி. பி. செலவு வேறு.

மானேஜர்,

கலா நிலயம்,

11, வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

கம்பராமாயணம்

நல்லகாகிதத்தில் செவ்விய அச்சில் அழகிய கட்டிடத்தில் பாடபேதங்களுடன் கூடிய மூலமும் தெள்ளிய பதவுரையும், அகன்ற விரிவுரையும் அணி யாப்பு சொல் முதலியவைகளைப் பற்றிய அருமையான இலக்கணக் குறிப்புரைகளும் அடங்கிய பதிப்புக்கள். இவ்வகை உரைகளை இயற்றிப் பதிப்பித்தவர், வை. மு. சடகோபராமாநுஜாசாரியாரும், சே. கிருஷ்ணமாசாரியாரும், வை.மு. கோபாலகிருஷ்ணமாசாரியாரும் ஆவர்.

பாலகாண்டம்	...	... ரூ	5 0
அயோத்தியாகாண்டம்		...	5 0
ஆரணியகாண்டம் ...		...	4 0
கிட்கிந்தாகாண்டம்		...	4 8
சுந்தரகாண்டம்	...	...	5 0

இவ்வகை உரைகளுடன் கூடிய

அஷ்டபிரபந்தம் ரூ. 3-8

எல்லாப் புத்தகங்களுக்கும் வி. பி. செலவு வேறு. வேண்டுவோர் ஒரு ரூபாய்க்குக் குறையாமல் தபால்தலை முன்னதாக அனுப்பிவைத்துக் கேட்கவேண்டும். எஞ்சிய தொகைக்குத் தபால் செலவுடன் சேர்த்துப் புத்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்படும்.

கலா நிலயம்:—வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

கணித சோதிடம்.

கணித ரீதியாய்ப் பலன் கூறுபவர். ஒருவருஷத்திற்கு மாதவாரியாகவோ அல்லது தசாபுக்தியாகவோ பலன் எழுத ரூ. 2. ஒரு வருஷத்திற்கு ஒன்பது பலனாக எழுத ரூ. 10. தினப்பலன் ரூ. 20. ஜாதகமில்லாதவர் பேரையும், கடிதம் எழுதும் நேரத்தையும் அறிவிக்கவும். ஏழு கேள்விக்கு ரூ. 1. பொருத்தம் பார்க்க ரூ. 1. ஜாதகம் குறிக்க ரூ. 2. மரணத்தைப்பற்றி வருஷ மாதத் தேதி நாழியுடன் அஷ்டவர்க்க பலன் எழுத ரூ. 25. புத்திர சந்தான மில்லாதவருக்குத் தோஷ நிவர்த்தி கூற ரூ. 5. அன்னிய நாட்டார் முன்பணம் அனுப்பவேண்டும்.

'அப்பாஜி சோதிடரை ஓராண்டாய் அறிவேன். அவரது சோதிடப்புலமையும் பலன்கூறும் திறத்தையும் கண்டுள்ளேன். பலன் சரியே நடந்து வருகின்றது' என, திரு T. V. கலியாணசுந்தர முதலியார் கூறுகின்றார்.

அப்பாஜி ஜோஸ்யர்,

321, ஐரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

கௌசிக சிரோ கல்பம்

உங்கள் சிரோகத்திற்கு மிகவும் ஆரோக்யத்தைத் தரக்கூடிய தைலத்தை நீங்களே செய்து உபயோகியுங்கள்.

போலித்தைலங்களையும் குணமற்ற எண்ணெய்களையும் (Hair Oils) விலைகொடுத்து வாங்கி ஏமாறாதீர்கள்.

கௌசிக சிரோகல்பத்தைப் பசும்பாலில் கரைத்துச் சரியளவு சுயமான நல்லெண்ணெய் சேர்த்து நெருப்பில் கொதிகவைக்க ஜலம் பூராவும் சுண்டிச் சுத்தமான தைலம்மட்டும் தனியாக நிற்கும். இத்தைலத்தை எடுத்து ஒருமண்டலம் உபயோகிக்க,மண்டையிடி ஒற்றைத்தலைவலி கண் எரிச்சல் மூளைக்கொதிப்பு இன்னும் சிரம் நேத்திரங்கள் சம்பந்தமான எல்லாவியாதிகளும் போய்விடும்.

பாக்கெட் ஒன்றிற்கு விலை அணா, 8, தபாற்கூலி வேறு. இதனை விற்க எங்கும் ஏஜண்டுகள் தேவை,

மனேஜர்:—சேலம் ஸ்டோர்ஸ்,

சேலம்—SALEM.

வர்த்தமானம்

'ஸ்ரீ ராமகிருஷ்ணவிஜயம்,' 'ஸ்ரீவிவேகாநந்த விஜயம்,' 'ஆநந்தமடம்,' 'சந்திரசேகரன்' முதலிய முதனூல் வழிநூலாதிகளை இயற்றித் தமிழ் மக்களுக்களித்தவரும், தமிழ்க்கலையொடு வடகலை ஆங்கிலம் வல்லுநரும்;தெலுங்கு, கன்னடம்,வங்காளிமுதலிய பாஷைகளில் அதிகப் பயிற்சி யடைந்தவருமாகிய ஸ்ரீயுத மஹேஶ குமார சர்மா என்னும் தமிழாசிரியர் 1929ம் ஆு செப்டம்பர்மீ 22உ யன்று சிங்கப்பூருக்கடுத்த ஜோஹர் நகரில் காலஞ்சென்றதாகக் கேட்டுப் பெரிதும் மனம் வருந்துகின்றோம்.

***

சென்னைப் புஸ்தகாலயச் சங்கம்.

நூல்நிலயங்கள் எங்கெங்கும் நிறுவி யாவருக்கும் கல்வியை மேன்மேலும் கற்கவேண்டுமென்ற அவாவூட்டி, அவ்வவா நிறைவடைதற்குரிய சாதனங்களையும் இயற்றித்தரும்பொருட்டு ஓர் இயக்கம் பரவி வருகின்றதென்பதைப் பலர் அறிவர். அதன் சார்பாய்ச் சென்னையில் புஸ்தகாலயச் சங்கம் ஒன்று சிலமாதங்களுக்குமுன் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. அச்சங்கத்தின் வெளியீடுகள் சில எமது பார்வைக்கு அனுப்பப்பட் டிருக்கின்றன. அவைகளில் ஒன்று புஸ்தகாலய இயக்கத்தைப்பற்றி அறிஞர் பலர் வரைந்துள கட்டுரைகளின் தொகுதியாகும். அதனில் கோஷன்பிரபு, இவ்வியக்கத்தைப் பாராட்டியுளார். இதனிற்கு வரைந்த முன்னுரையில் ரைட் ஹானரபில் வி. ஸ். ஸ்ரீநிவாச சாஸ்திரியார், இவ்வியக்கத்திற்கு ஸ்ரீமான் K. V. கிருஷ்ணசுவாமி ஐயர் தலைவராயிருப்பதுமிகவும் நல்லதோர் சகுனமாகும் என்பர்.ஸ்ரீமான் K. V. கிருஷ்ணசுவாமி ஐயர் எழுதியுள கட்டுரைகள் மூன்று இத்தொகையின்கண் உள. அவை மூன்றினுள், புஸ்தகாலய இயக்கத்தின் நோக்கத்தையும், சிறிது படித்திருப்பவர்களுக்கு இவ்வியக்கம் புரியவல்ல உதவியையும், பொதுஜனக் கல்விக்கும் புத்தகாலய இயக்கத்திற்குமுள்ள தொடர்பையும், விளக்கியுள்ளார். நூல்நிலயங்களது பெருமை அதன்கண் உள்ள புத்தகங்களது மிகுதியில் அடங்கவில்லையென்றும், அவ்வாலயத்தை நடத்தும் உத்தியோகஸ்தர் கல்வியும் ஊக்கமும் உடையவராய், அதன்கண் நாடுவோரை இன்முகங்கொண்டு விருந்தென வழைத்து அவருக்குப் பற்பல புத்தகங்களின் விடயங்களை எடுத்தியம்பி அவாவுடன் அவர் தேர்ந்து ஓதுமாறு உதவுகின்றநன்மையாலேயே அப்பெருமையைமதிக்கவேண்மென்றும்,விளக்குமோர் கட்டுரை கவிவரர்இரவீந்திரநாதர் வரைந்துளார். இவ்வியக்கத்தால் கல்வியளித்தல் இந்நாட்டின் பண்டைய முறையன்றே, மேனாட்டினின்று கொணர்ந்திங்குப் புகுத்தலாமோ வெனின், ஆனரபில் வி.இராமதாஸ் பந்துலு அவர்கள், தற்கால நிலைக்குப் பண்டைமுறையில் பயில்தல் இயலாதாகையால் இவ்வகை எந்திரங்கொண்டே இக்காலக் கல்வியபிவிருத்தியை நாடுதல் தக்கதே யென்றும், தேசபந்து தாஸரும் அதே கருத்தினரா யிருந்தனரென்றும் ஓர் கட்டுரையுள் காட்டியிருக்கின்றனர். ஸ்ரீமான் பட்டாபி சீதாராமய்யா, சிறுபிள்ளைகளின் கல்வியைக் கவனிக்க வேண்டுமென்பது ஒருபுற மிருக்க, வயது வந்த வாலிபர்களது மனத்திற்குத் தக்க முதிர்ச்சியைத்தரும் முயற்சிகளும் மிகவும் முக்கியமானவைகளென்று காட்டிய கட்டுரையும் ஒன்று உளது. ஸ்ரீமான் ஸ். சத்தியமூர்த்தியும், கல்வியும் பொறையும் அன்பும் உடையவர்கள் இவ்வியக்கத்தில் ஈடுபட்டுக் கிராமங்கள்தோறும் சென்று கிராமவாசிகளைப் புத்தகங்களோடு பழகும்படி செய்வராயின், இதனால் பெரும் நலங்கள் ஏற்படுமென்று தான் நம்புவதாக எழுதுகின்றார். தற்கால நிலைமையில் உள்ள அறியாமை, மூடவழக்கங்கள், சாதிச் சச்சரவு முதலிய குறைகளை எடுத்துக்காட்டி, இவைகளைப் போக்கவல்லது கல்வியே என்றும், அக்கல்வியை யாவருக்கும் எளிதில் இருக்குமிடந்தேடி அளிக்கவல்ல இவ்வியக்கம் தக்க சமயத்திலேயே தோன்றியிருக்கின்றதென்றும், ஸ்ரீமான் S. இராமசுவாமி ஐயார் ஒரு கட்டுரை எழுதியிருக்கின்றார். இவ்வியக்கத்திற்கு வர்த்தமானப்பத்திரிகைகள் பக்கபலமாகக்கூடிய விதங்களை விளக்கி ஸ்ரீமான் A. இரங்கசுவாமி ஐயங்கார் எழுதியிருக்கின்றனர். ஸ்ரீமான். A. இராமசுவாமிமுதலியார் அவர்கள், இந்தச் சங்கம், முனிசிபாலிடிகள் தாலுக்போர்டுகள் முதலிய பொதுஸ்தாபனங்களோடு தக்க ஏற்பாடுகள் செய்துகொண்டு தமது கருமத்தைச் செவ்வனே நடத்தவல்ல வகைகளை விவரமாகக் கூறியிருக்கின்றனர். இச்சங்கத்தின் காரியதரிசியாகிய ஸ்ரீமான் S. R. ரங்கநாதான், மேனாடுகளில் நூல்நிலய நிர்மாணமும், நடைபெறுகின்ற முறைகளையும், அவைகளால் அந்நாடுகள் அடைந்துள நன்மைகளையும் விளக்கியுளார். கடைசியில், டிப்டி டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் ஆக இருக்கும் ஸ்ரீமான் M. A. காண்டத், அறியாமை யென்னும் அரக்கனை அகற்றுதற்கேற்ற இவ்வியக்கத்தில் யாவரும் சேர்ந்து தம்மால் இயன்றதைச் செய்யவேண்டுமென்று கூறுகின்றார்.

முன்னுரைத்த கட்டுரைகளெல்லாம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள. ஸ்ரீமான்களான, S. பவானந்தம் பிள்ளை, S. கலியாணசுந்தரம் ஐயர், ஸ். வையாபுரிப்பிள்ளை, P. N. அப்புஸ்வாமி ஐயர், மு. இராகவ ஐயங்கார், S. V. கனகசபைபிள்ளை, V. நாராயண ஐயர், C. நமசிவாயமுதலியார், A.M. சடகோபராமாநுஜாசாரியார் போன்றவர்கள், இவ்வியக்கத்திற்குச் சார்பான பற்பல விஷயங்களைப்பற்றித் தமிழில் எழுதிய கட்டுரைகளும் இதனில் அடங்கியிருக்கின்றன.

இக்கட்டுரைக ளடங்கிய வெளியீடு, கிராமயூனியன்களுக்கும் பஞ்சாயத்துகளுக்கும் இலவசமா யனுப்பப்படும்.மற்றஸ்தாபனங்கள்இரண்டணாதபால்தலை, "புஸ்தகாலய பிரசார ஆபீஸ்" "செனட் ஹவுஸ்" சென்னை என்றவிலாசத்திற்கனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0 (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET.

Purasawalkam MADRAS.

1928-ம் ஆண்டுப் பிரதிகள் பயிண்டு செய்தும் *கலா நிலயம்* செய்யாமலும் எம்மிடம் கிடைக்கும்

1. சேக்கிழாரும் கண்ணப்பரும்

சேக்கிழார் திறனும், அன்பினது தத்துவமும், கண்ணப்பர் பக்திச் சிறப்பும் விளக்கும். T. P. மீனாட்சிசுந்தரம் M. A. B. L.—51 கட்டுரைகள்.

2. கம்ப இராமாயணம்

பாலகாண்டம், ஆற்றுப்படலமுதல் மிதிலைக்காட்சிப் படலம் வரை—T. N. சேஷாசலம், B. A. B. L. 51 கட்டுரைகள்.

3. அகப்பொருள் வரலாறு

காட்சிமுதல், ஒதற்பிரவு வரை—K. இராமரத்னம் ஐயர் B. A. 18 கட்டுரைகள்.

4. காந்திமதி

காவிய இயல்நலம் பெற்ற நற்றமிழ் நாவல். T. N. சேஷாசலம் B. A. B. L. 51 இதழ்களில் வந்துளது.

5. தமிழ்ப்பாடம்

நளவெண்பா,—சுயம்வர காண்டம் கலிதொடர் காண்டம். இந்த வருடத்தில் பெரும் பகுதி அணி இலக்கணமும், சொல்லிலக்கணமும் ஓதப்பட்டுளது.

6. மேனாட்டுத் தத்துவ அறிஞர்

பிரிடரிக் நீட்சேன் எபிகூரன் ஜினோன் பைரோன் அரிஸ்டாடல் முதலாயினோர்—T. R. இராஜகோபால்,

7. இலக்கிய ஏற்ற ஆராய்ச்சி

E. T. *சொக்கம்மாள்* B. A; L. T. *எழுதியது* 6 *கட்டுரைகள்.*

8. தேவாரமும் ஐந்திணையும்

*தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்—*E. N. *தணிகாசல முதலியார்* B. A. B. L. 8 *கட்டுரைகள்*

9. மேனாட்டறிஞர் கட்டுரை (மொழி பெயர்ப்பு)

கார்லைல், ரஸ்கின், எமர்ஸன், டால்ஸ்டாய் செஸ்டர்டன், ஆஸ்கார் ஒயில்டு, ராபர்ட் பர்ன்ஸ் முதலாவினோர்.

10. இலக்கியக் கதைகள்

*புரந்தனர் பெருந்தவம், சித்ரகூடம், அகத்தியர், சூர்ப்பனகை.—*R. *முத்தையர்*

11. வானசாஸ்திரம்

இதன் உண்மைகளை யாவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் சுருக்கமாய் எளியநடையில் சொல்லப்பட்டுளது.—20 கட்டுரைகள்.

மலர்வனம் பழமுதிர்சோலை

சிந்தாமணி,சிலப்பதிகாரம்,மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு, முதலியவைகளினின்று எடுத்தமைந்த தனிநிலை அழகுகள்—14 கட்டுரைகள்.

காவடி நாளூற்றின் திறம், சிவகாமி சரித்திர ஆராய்ச்சி, பாரசீகப்புலவர் உமர்கயம் காட்டுவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்களும் வந்துள்ளன.

விலை விபரம்—தபால்	பையின்டு செய்யாதது	உள்நாடு ரூ 8—0—0	வெளிநாடு ரூ 9—8—0
செலவுஉள்பட:—	ஆப்லெதர் கில்டுபயின்டு	உள்நாடு ரூ 10—0—0	வெளிநாடு ரூ 11—8—0
	காலிகோ பயின்டு	உள்நாடு ரூ 9—8—0	வெளிநாடு ரூ 11—0—0

கலா நிலயம் ஆபீஸ், 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)